
# திருக்கோயில்

அக்டோபர் 1988 விலை ரூ. 3





அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன்.

முகப்பு

வல்லக்கோட்டை

அருள்மிகு கோடையாண்டவர்


# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்

த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 அக்டோபர் 1988 | விபவ ஆண்டு ஐப்பசித் திங்கள் விலை ரூ. 3-00 | மணி : 10 |
|---|---|---|---|


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. 36-00 |
| ஆயுள் | — | ரூ. 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


கந்தவேள் கருணை
— திருமுருக கிருபானந்தவாரியார்.

அம்மனும் சாமியும் அன்புமயம்
— கவியோகி சுத்தானந்த பாரதியார்

மெய்ப்பொருள் நாயனார்
— அருட்செல்வி

அன்னையும் ஆயினள்
— டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்.

உழவாரப் பணிபுரிதல் உவப்பு
— பி. ஸ்ரீனிவாசன்

ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடினார்
— அருள்முருக செளந்தரராஜன்.

திருப்பாவை தந்த திருப்பாவை
— வே. தியாகராஜன்.

மகிஷாசுரமர்த்தினி
— நிறைமதி

வல்லக்கோட்டையில் நான் கண்ட முருகன்
— எம். வி. அரங்கநாதன்

இறைவனார் அருட்காட்சி
— சு. சண்முகம்.

கம்பரின் இராமாவதாரம்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்.

# கந்தவேள் கருணை



## -[10]-

திருமுருக கிருபானந்த வாரியார்

தேவர்கள் வேதவாக்கியங்களால் எண்ணிலா ஸ்தோத்திரங்களைச் செய்து ''எம்பெருமானே! அடியேங்கள் தேவரீரது விசுவரூபத்தை முற்றும் தரிசிக்கும் வண்ணம் எங்களுக்கு ஆற்றல் தந்தருள வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். கருணைக்கடலாகிய குமாரக் கடவுள் திருவுளம் இரங்கி அவர்களுக்குத் திவ்விய நேத்திரங்களைக் கொடுத்தார். (கண்ணபிரான் கலியுகத் தொடக்கத்தில் அர்ஜுனனுக்கு விசுவரூபதரிசனம் தந்தபோதும் அதனைக் காணத் திவ்விய நேத்திரம் நல்கினார்.) அநந்தகோடி சூரியர்கள் திரண்டாற்போலப் பேரொளி வீசி நின்ற விசுவ ரூபத்தை அடி முதல் முடி வரையும் தேவர்கள் தரிசித்து, ஆனந்த பரவசம் கொண்டு வணங்கி நின்றார்கள்.

அடிமுதல் முடியின் காறும் அறுமுகன்
உருவம் எல்லாம்
கடிதவன் அருளால் நோக்கிக் கணிப்பிலா
அண்டமுற்றும்
முடிவறும் உயிர்கள் யாவும் மூவருந்தேவர்
யாரும்
வடிவினில் இருப்பக் கண்டு வணங்கியே
வழுத்திச்சொல்வார்.
அம்புவி முதலாம் பல்பேர் அண்டமும்அங்கங்
குள்ள
உம்பரும் உயிர்கள் யாவும் உயிரலாப்
பொருளும் மாலும்
செம்பது மத்தினோனும் சிவனோடும் செறி
தல் கண்டோம்
எம்பெரு மானின் மெய்யோ அகிலமும்
இருப்பதம்மா

''எம்பெருமானே! பிருதிவியண்டம் முதலிய அண்டங்களும், ஆங்குள்ள தேவர்களும் உயிர்ப் பொருள்களும், பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும், தேவரீரது திருமேனியில் இலங்கக் கண்டோம். அகிலம் எங்கும் இருப்பது தேவரீரது திருமேனிதான் என்பதைப் பெருங் கருணையுடன் தாமே அறிவித்ததால் பிரத்தியட்சமாக அறிந்து கொண்டோம். அருவமும் உருவமுமாகிய தேவரீரது திருவருளைப் பெற்றுப் பேருருவத்தின் அடியையும் முடியையும் எங்களைப் போலக் கண்டவர் வேறு யார் உளர்? தங்களின் முழுப் பெரும் திருவுருவத்தைத் தரிசித்ததன் மூலம் இனி நாங்கள் பிறவித் துன்பமடையாது முத்தியின்பம் அடைவோம்.'' என்று தேவர்கள் மகிழ்ந்து கூறினர்.

முருகப் பெருமான் தமது விசுவரூபத்தை மறைத்து, ஆறுமுகங்களுடன் முன்னையவடிவத்தில் காட்சி தந்தார். இந்திரன் முருகக் கடவுளை வணங்கித் துதித்து, ''கருணாமூர்த்தியே! அடியேனும் தேவர்களும் தொண்டு செய்ய விண்ணுலகத்தைத் தேவரீரே அரசு செய்து சூராதியரை அழிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

இகமொடு பரமும் வீடும் ஏத்தினர்க் குலப்பு
றாமல்
அகனமர் அருளால் நல்கும் அறுமுகத்
தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான் சொற்ற வாசகம் சுட
ரொன்றங்கிப்
பகவனுக் கொருவன் நல்கப் பராவிய போலு
மாதோ

தம்மை வழிபடும் அடியவர்க்கு இகம் பரம் வீடு என்று முத்திற நலன்களையும் அருளால் வழங்கும்ஆறுமுகத் தடங்கடலுக்கு, இந்திரன்தனது அரசைத் தருகின்றேன் என்று கூறியது, அக்கினி தேவனுக்கு ஒருவன் ஒரு விளக்கைத் தருகின்றேன் என்றதுபோலும்!

கந்தப்பெருமான் இந்திரனை நோக்கி அருளுடன்''நீ நமக்குத் தந்த அரசை நாம் உமக்கே திருப்பித் தந்தோம், நீங்கள் சேனைகள். நாமே சேனைகளுக்குச் சேனாதிபதியாகி அசுரர் யாவரையும் வெல்லுவோம். வருந்தாதீர்கள்'' என்று கூறி அருள் செய்தார். தேவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டனர்.

''எம்பெருமானே! இந்த அண்டத்து மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கள் முதலியனவெல்லாம் இந்நாளில் தேவரீர் திருவிளையாடலால் முறை பிறழ்ந்தன. அவைகளையெல்லாம் முன்பு போல நிறுவியருள வேண்டும்'' என்று இந்திரன் வேண்டிக் கொண்டான். எம்பெருமான இளநகை புரிந்து, ''நம்மாலே முறை பிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக் கடவன'' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே அவையெல்லாம் முன்னை நிலையை அடைந்தன.

இந்திரன் கந்தக் கடவுளிடம், ''மூவர் தேவாதிகள் தம்பிரானே! வேத முடிவிலே விளங்குகின்ற தங்கள் திருவடிகளைப் பூசித்து வழிபட விரும்பு

கின்றோம். அதற்குத் திருவருள் புரியவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். ஐயன் இசைந்தார். தேவர்கள் பின்தொடர மேருமலையிலிருந்து புறப் பட்டுத் திருக்கயிலை மலைக்கு அணித்தாயுள்ள ஒரு மலையை அடைந்தார். அங்கு இந்திரன் தேவதச்சனைக் கொண்டு நவமணிகள் பதித்த ஒரு செம்பொன் ஆலயமும், அதனுள் ஒப்பற்ற அரி யணையும் அமைத்தான். தேவர்கள் திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம், நிவேதனப் பொருள்கள் முதலியவற்றைக் கொண்டுவந்தனர். கோயிலினுள் அமைந்திருந்த அரியணையில் முருகக் கடவுள் எழுந்தருளினார். இந்திரனும் மாலயனாதி தேவர்களும் ''ஞானநாயகரே! நாங்கள் எல்லாரும் உமது சேனைகள். தாங்கள் எமக்குச் சேனாதிபதி யாகுக'' என்று கூறி ஆகாய கங்கையால் திரு மஞ்சனம் செய்து அர்ச்சித்துப்போற்றி வழிபட் டார்கள். தேவ சேனாதிபதியாக முடிசூட்டினார் கள்.

ஆன காலை அமரர்கள் வாசவன்
ஞான நாயக! நாங்கள் உன்கொரு
தானை யாகும்! தலைவனை நீயெனா
வான நீத்தத்து மஞ்சனம் ஆட்டினார்.

தேவசேனாதிபதியாகப் பட்டம் சூடிய பெரு மானை''தேவதேவ தேவாதி தேவப் பெருமாளே'' என்று வாய் நிறைய வாழ்த்துவார் அருணகிரி நாதர்.

கந்தக் கடவுளைத் தேவர்கள் பூசித்தற்கு அவர் எழுந்தருளிய அம்மலை 'கந்தவெற்பு' எனப் பெயர் பெற்றது. முருகப்பெருமான் கந்த வெற்பை நீங்கித் திருக்கயிலையை அடைந்தார். இந்திரனும் தேவர்களும் தங்கள்தங்கள் இடங்களுக்குச் சென் றார்கள். திருக் கயிலையில் இலக்கத்தொன்பது வீரர்களும். பூதர்களும் சேவிக்க முருகப்பெருமான் எழுந்தருளியிருந்தார்.

சிவபெருமானின் பிரீதிக்காக நாரத முனிவர் ஒரு வேள்வி செய்ய விரும்பினார். அரி, அயன், இந்திரன் அந்தணர், அருந்தவர் முதலியவர்களுடன் பூவுல கில் யாகத்திற்கெனத் தகுந்த சேத்திரம் அமைத்து வேதாகம விதிப்படி வேள்வி செய்யத் தொடங்கி னார். வேள்வி செய்யும்போது மந்திரம் மாறுபட்ட தால் யாக அக்கினியிலிருந்து செவ்வானம் போன்ற நிறத்துடன் ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. ரஸா யனப் பரிசோதனைகளில் ஒரு பொருளுக்கு மாறாக வேறு உபயோகித்தால் விபரீதம் ஏற்பட்டுவிடு மல்லவா? ஒலிகளின் ரஸத்துக்குட்புகுந்து முனிவர் கள் கண்ட மந்திர நாதங்கள் மாறுபட்டாலும் இவ்வாறே ஆகும். ஒலிகளும் நம் கண்ணுக்குத் தெரியும் பொருட்களைப்போல் உள்ளே அணுசக்தி கொண்டுள்ளன.

கோர உருவத்துடன் வேள்வித் தீயினின்று எழுந்த ஆட்டுக்கடா பெரும் சினத்துடன் ஆர வாரம் செய்தது. அதனைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். உயிர்களைக் கொல்ல நினைத்து அந்த ஆட்டுக்கடா அஷ்ட குலாசலங்கள் அசைந்தாட ஆர்த்தது. வயிரத்துக்கு நிகரான கொம்புகளை நிலத்தில் குத்தி தூளி கிளப்பியது. அதனைக் கண்ட நாரத முனிவர் முதலியோர் நடு நடுங்கி யாகத்தைவிட்டு வெளி யேறினர். ஆட்டுக்கடா அவர்களைத் துரத்திச் சென்று போரிட்டது. போரில் சிலரது கால்கள் ஒடிந்தன; சிலரது குடல்கள் சரிந்தன. சிலர் கைகளை இழந்தனர். ஆட்டுக்கடா உயிர்களைத் துன்புறுத்தி உலகம்யாவும் அஞ்ச உலவியது. ஆகா யத்தில் பாய்ந்து சூரிய சந்திரர்களது தேர்களை அழித்தது. தேர்களில் பூட்டப்பட்டிருந்த குதிரை களுடன் போர்புரிந்தது.

இதனைக் கண்டு அஞ்சி ஓடிய நாரதரும் மற்ற முனிவர்களும், தேவர்களும் கயிலை மலையை அடைந்தனர். மலையில் ஏறிச் செல்லும்போது எல்லா ஆற்றலும், எல்லா முதன்மையும், எல்லா அனுக்கிரகமும் உடைய எந்தை கந்தவேள் இலக் கத்தொன்பது வீரர்களுடன் கூடி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவரைக் கண்ட தும் சந்திரனைக் கண்ட கடல்போல் உவகை பொங்க உளம் மகிழ்ந்தனர். ''நாம் இதற்காகச் சிவபெருமானிடம் செல்ல வேண்டாம். நம் துயரத்தை நீக்கும் பொருட்டுக் குமரக் கடவுளே இங்கு எழுந்தருளியிருக்கின்றார்'' என்று தங்களுக் குள் தெளிவு கொண்டனர். நம்பினோர்க்கு அரு ளும் எம்பிரான் முன்சென்று அவரது திருவடித் தாமரையில் வீழ்ந்து, ஓலமிட்டுத் துதித்தனர்.

''மூவர்கள் முதல்வா ஓலம்; முக்கண்ணன்
புதல்வா ஓலம்
சேவலங் கொடியாய் ஓலம்; சிறந்தசிற்பரனே
ஓலம்;
தேவர்கள் தேவே ஓலம்; தெய்வநா யகனே
ஓலம்;
ஆவலுற் றருள்வாய் ஓலம்; அறுமுக
ஓலம்; ஓலம்!''

என அரற்றிப் போற்றினார்.

கந்தப் பெருமான் தேவர்களுடைய பெருந் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி, ''அஞ்சாதீர்கள்'' என்று அபயம் தந்தார்.

தம் அருகே நின்ற வீரவாகு தேவரைப் பார்த்து, ''வேள்வியில் தோன்றி உயிர்களைக் கொன்று எங்கும் திரிகின்ற ஆட்டுக்கடாவை நீ விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக்கொண்டு வா'' என்று பணித்தருளினார். வீரவாகு தேவர் அவ்வாக்ஞையைச் சிரமேல் தாங்கி, ஆட்டுக் கடாவைத் தேடிச்சென்றார். ஆட்டுக்கடா பூமியில் உள்ளவர்களைச் சிதைத்து, கீழ் ஏழுலகிலும் சென்று அங்குள்ளோரை வதைத்து, சுவர்க்க லோகம் முதலிய மேல் உலகங்களையும் தன் கொம் பால் தகர்த்து நாசஞ் செய்து, நான்முகனின் உலக மாகிய சத்திய லோகத்தில் இறுமாந்து ஆரவாரித்து நின்றது.

வீரவாகுதேவர், அதன் கொம்பை அநாயாச மாகப் பற்றிக் கரகர வென்று சப்தம் உண்டாகு மாறு இழுத்துக் கொண்டு போய்த் திருக்கயிலாய மலை வந்தடைந்து முருகன் திருமுன் விடுத்துப் பணிந்து நின்றார். தேவர் யாவரும் கண்டு நடுங் கிய ஆட்டினை வீரவாகு தேவர் அவ்வளவு எளிதில் அடக்கியது எவ்வாறு? ஆறுமுகனின் அருளாலும் ஆறுமுகனிடம் அவருக்கிருந்த அளப்பரும் பக்தி யாலுமேயாகும்.

## நல்லகாலம் பிறக்கிறது

அன்பர்காள்! காலம்மாறுகிறது. வேறுபாடுகள் ஒழிகின்றன. உலகில் ஒரு சமரசப் பசி எடுத்திருக் கிறது. சாதிமத பேதங்கள் எல்லாம் ஒழிகின்றன. அனைவரும் அந்தரான்மாவில் ஒன்றி வாழும் சுத்த சன்மார்க்கயுகம் பிறக்கிறது. அப்பிறப்பின் வலியே இப்போது நடக்கும் போராட்டங்களும், அசுரக் கொடுமைகளுமாம்.

— கவியோகி சுத்தானந்த பாரதி.



முருகக் கடவுள் முறுவல் பூத்து, தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, ''ஆட்டுக்கடா நம்மிடம் வந்துவிட்டது. இனி நீங்கள் அஞ்சாது யாகத்தை இனிது முடியுங்கள்'' என்று அருளிச் செய்தார்.

தேவர்கள் எல்லையில்லாத திருப்தியும் ஆனந்தமும் அடைந்தனர். ''எம்பெருமானே! அடியோங்களுக்கு இன்னும் ஒரு வரம் தரவேண்டும். இவ் ஆட்டுக் கடாவை வேறெங்கும் விடாமல் தாங்கள் வாகனமாக ஏற்றுக்கொண்டு அருளுதல் வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டனர்.

கொடியவர்களே அடியவர்களை விடப் பாக்கியசாலிகள். எம்பிரானுடனேயே எப்போதும் இருப்பார்கள். நடராஜர் பாதத்தின்கீழே அநவரதமும் முயலகன் வாழ்வது போலும், துர்க்கையம்பிகையின் திருவடியின் கீழே மகிஷன் நிரந்தரமாய் வாழ்வது போலும், முருகனுடன் ஆட்டுக்கடா வாழலாயிற்று. முயலகனும் மகிஷனும் போல் ஆடு அஞ்ஞானத்தைக் குறிக்கும். ஞானமூர்த்தி அஞ்ஞானத்தின் மீது ஆரோகணித்தார்.

ஆண்டவனுக்கு வேண்டுவது வேண்டாதது எதுவுமே இல்லை. நமக்குத் தீயனவாகத் தோன்றுபவையும் இறைவனுக்கு வேண்டாதன அல்ல. நம்மிடமிருந்து அவற்றைப் பிரித்து தன்னிடமே வைத்துக் கொள்வான்.

அக்கினிக்கு வாகனம் ஆடு. முருகப் பெருமான் அக்கினியேதான். அக்னிபூஎன வேதத்தால் பிரதிபாதிக்கப்படுபவன். எனவே ஐயனும் ஆட்டை வாகனமாகக் கொண்டு அருளினார். அக்கினி தேவனுக்குள்ளேயிருந்து அதற்கு வெப்பம் தரும் மூலாக்கினி தேவன் தானே என்பதைக் காட்டுதற் பொருட்டு ஆட்டு வாகனத்துடன், அண்டங்களிலெல்லாம் பவனி வந்தார். ஜனனமற்ற முழுமுதற் பொருள் என்பதால் அஜன் என்று பெயர் கொண்ட ஆறுமுகச் சிவனாரை அஜவாகனன் என்பதாலும் வேதங்கள் ''அஜன்'' என்று அழைக்கின்றன.

முருகப் பெருமான் மும்மலத்தை அடக்கியவர் என்பதாலேயே அவருக்கு மயில், ஆடு, யானை என மூன்றுவாகனங்கள். ஆணவம், கன்மம், மாயை என்று மலங்கள் மூன்று. நமது இயல்பிலேயே, நமது அமைப்பின் அணுவிலேயே, உள்ளது 'நான் எனது' என்ற இரு கூறுகொண்ட ஆணவமலம். நமது செயல்களில் வந்து சேருவது கன்ம மலம். நாம் பரம்பொருளிடமிருந்து பிரிந்து பேதமாய் அஞ்ஞான வயப்பட்டு நிற்பது மாயா மலம்.

ஆன்மா என்று உளதோ அன்றே ஆணவ மலமும் உண்டு. அதன் வேகத்தை அடக்கவே கன்ம மாயா, மலங்கள் உள்ளன. தன் இயல்பால் செருக்கு மிகுந்த மயில் ஆணவமலம், தனது செயலால் மதம் பிடித்த யானை கன்ம மலம், அறிவற்ற ஆடு மாயா மலம்.

காலா காலத்தில் மலம் நீங்காதாயின் எப்படி நோயற்ற வாழ்வு வாழ முடியாதோ அவ்வாறே இம் மும்மலம் நீங்காது போனால் ஆன்மாவுக்கு உய்வு இல்லை. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்று மணிவாசகர் பாடியது போல் இறைவனிடமிருந்து ஜீவர்களை வேறு படுத்தினாற் போல் மாயா மலத்துக்காட்படுத்தும். அம்பாள் தான் மும்மலத்தைப் போக்கவும் ஜீவர்களைத் தூண்டி, அவர்களை நல்வழியில் வளர்த்தெடுத்து அருள்கிறாள். மும்மலத்தினின்றும் நீங்கிப் பசுபதியுடன் சேரவேண்டும்.

''இருவினைமும்மலமும் அற இறவியொடு
பிறவியற
ஏகபோகமாய்நீயு நானுமாய்
இறுகும் வகை பரமசுக மதனையருள்''

—திருப்புகழ்

முருகப் பெருமானிடம் மயில்போல் அடங்கியிருக்கிறது ஆணவ மலம்; ஆடு போல் ஒடுங்கியிருக்

கிறது மாயா மலம். கட்டுண்ட யானைபோல் முடங்கியிருக்கிறது கன்ம மலம்.

குமரக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகக்கொண்டு எல்லா உலகங்களிலும் உலவிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து இலக்கத் தொன்பது வீரர்களும் சூழ வெள்ளி மலையின் கண் எழுந்தருளியிருந்தார்.

ஒரு நாள் பிரம்மதேவர், இந்திராதி தேவர்களுடனும், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்யாதரர் முதலிய கணங்களோடும் சிவபெருமானைச் சேவிக்கும் பொருட்டும் திருக்கயிலாய மலையை அடைந்தார். சிவ சந்நிதிக்குச் செல்லும் வழியில் முதல் கோபுர வாயிலின் வடபால் செவ்வேள் லீலை புரிந்து கொண்டிருந்தார். பிரம்மனைத் தவிர மற்ற எல்லோரும் யான்-எனது என்னும் செருக்கின்றி முருகப்பிரானை வணங்கி வழிபட்டனர். பின்னர் திருக்கோயிலினுட் சென்று சிவபெருமானையும், உமாதேவியாரையும் வலம் வந்து துதித்துத் திருவருளைப் பெற்றுத் திரும்பினார்கள்.

எனாதியான் எனுஞ்செருக் கிகந்துதன்
னுணர்ந்துளார்
மனாதிகொண்ட செய்கைதாங்கி மரபின்
முத்தி வழிதரும்
அநாதியீசன் அடிவணங்கி அருள டைந்து
மற்றவன்
தனாதுமன்றம் நீங்கிவாயில் சாருகின்ற
வேளையில்

திரும்பி வரும் வழியில் இலக்கத்தொன்பது வீரர்கள் புடைசூழ நவரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளிமுருகவேள் திருவிளையாடல் செய்து கொண்டிருந்தார். எல்லாத் தேவர்களும் ஆறுமுக வள்ளலை வலம் வந்து அடிமலர் தொழுது தோத்திரம் புரிந்து சென்றனர். மூவர்களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத முழுமுதலாகிய முருகப் பெருமானைக் கண்ட பிரம்ம தேவர், 'இவன் ஒரு பாலன்தானே, இவனை நானும் வணங்க வேண்டுமா?' எனநினைத்து இறுமாந்து சென்றார்.

'சிவன் வேறு; தான் வேறு அன்று: மணியும் ஒளியும் போல் சிவனும் நானும் ஒன்று' என்பதையும், முருகனாகிய தன்னை யொழித்துச் சிவபெருமானை வழிபடுவோர்க்குத்திருவருள் உண்டாகாது என்பதையும் பிரம்மன் வாயிலாக உலகுக்கு உணர்த்த எண்ணிய முருகப்பெருமான் அயனின் செருக்கை அகற்றி நல்லருள் பாலிக்கவும் திருவுளங் கொண்டார்.

தருக்குடன் செல்லும் பிரம்மனை அழைத்தார் கந்தன். பிரம்மதேவர் ஆறுமுகனை அணுகி அகங்காரத்துடன் சிறிது கைகுவித்து வணங்கிடாத பாவனையாக வணங்கினார்.

முருகப்பெருமான் பிரம்மனை நோக்கி, ''நீ என்ன தொழில் செய்கின்றாய்?'' என்று வினவினார். முருகனின் கம்பீரக் குரலே எத்தொழிலுக்கும் அதிபராக, மற்றைய தேவரை அவரவரது தொழிலில் செலுத்துபவர் அவர்தான் என்பதைப் புலப்படுத்தியது. பிரம்மனுக்கும் சிறிது அச்சமுண்டாயிற்று.

''சிவபெருமான் ஆணையினாலே படைக்கும் தொழில் செய்கின்றேன்'' என்று நடுங்கிக் கொண்டே கூறினார்.

''படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதம் வருமா?'' என்று முருகவேள் வினவினார்.

## அம்பாளைத் தியானிப்பதே சாலச் சிறந்தது !

அம்பாளை உபாசிப்பதே ஜன்மா எடுத்ததன் பெரிய பலன். அன்புமயமான அன்னையை தியானிப்பதை விடப் பேரானந்தம் எதுவும் இல்லை.

அம்பாளை உபாசிப்பவர்கள் தனியாக, லட்சுமி, சரஸ்வதி இருவரையும் உபாசிக்க வேண்டும் என்பதேயில்லை. அவர்கள் இரண்டு பேரும் அம்பாளுக்கு இரண்டு பக்கத்திலும் சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே லலிதா சகஸ்ர நாமத்தில் சொல்லியிருக்கிறது. சரஸ்வதியையும், மகாலட்சுமியையும் தன் கண்களாகக் கொண்டவளே காமாட்சி.

—காஞ்சி பரமாச்சாரியார்.

''சிவபெருமான் அளவற்ற வேத சிவாகமங்களை அருளிச் செய்து அவற்றுள் சிலவற்றை தான் உய்யும் பொருட்டு எனக்கு உபதேசித்துள்ளார்; அவற்றை நான் உணர்வேன்'' என்று நான்முகன் கூறினார்.

கந்தவேள் அதைக் கேட்டு நகைத்தார். பிரம்மன் வேதத்தை அறிந்திருந்தானேயன்றி உணர்ந்திருக்கவில்லை என்பதை ஐயன் தெரிந்துகொண்டே நகைத்தார். ''நன்று நன்று! வேத உணர்ச்சி நினக்கிருக்குமாயின் முதல் வேதமாகிய இருக்கு வேதத்தினைச் சொல்லக் கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.


தாமரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாமறைத்தலை எடுத்தனன் பகர்தலும்
வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேல் நிற்றிமுன்
கழறும்
ஓமெனப்படும் மொழிப் பொருள் இயம்பு
கென்றுரைத்தான்.

வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் ''ஓம்'' என்ற குடிலை மந்திரத்தைக் கூறி, இருக்கு வேதத்தைச் சொல்ல ஆரம்பித்தார் பிரம்ம தேவர். அப்பிரணவ மந்திரத்தையே தமது திருமுகங்களில் ஒன்றாகவுடைய வேதமந்திரஸ்வரூபராகிய ஐயன் திருநகை செய்து, ''பிரம்மனே நில்! நீ முதலில் சொன்ன ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் யாது?'' என்று கேட்டார்.

பிரம்மன் பிரணவத்தின் பொருள் தெரியாது விழித்தனன. அவனது கண்கள் சுழன்றன; நாணமுற்று விக்கித் திகைத்தான்.

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத் துடையதோர்
முருகன்
நகைத்து முன்னெழுத் தினுக்குரை பொரு
ளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன்
விக்கித்
திகைத்தி ருந்தனன் கண்டிலன் அப்பொருள்
திறனே

—[தொடரும்.]



# அம்மனும் சாமியும் அன்புமயம்

— கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் —

வான் பொழிய மண் விளைகிறது; பாடுபட்டால் பயிர் செழிக்கும். கணக்கற்ற தானியங்களையும், கடலைகளையும், காய் கனி கிழங்குகளையும் பூமாதேவி தருகிறாள். அவற்றையுண்டு ஜீவசக்தி பெருகி, மனிதன் நூறாண்டு வாழலாம். தாவரமே மனித உணவு; அவற்றையும் அளவுடன் உண்ண வேண்டும்.

இயற்கைக்கு மாறாக மனிதர் புலால் உண்பது அறமோ? இரக்கமும் அன்பும் நன்றியும் பகுத்தறிவும் இல்லாத விலங்குகள் போல், மக்களும் பிறவுயிர்களைக் கொன்று உண்பதா? மனிதர் வயிறு சுடுகாடா? மனிதர் பிறவுயிர்களின் கூற்றுவரோ?

மனிதன் ஊன் அருந்தியானால் அவனுடைய நகங்களும் பற்களும் புலிபோல் கூர்மையுடையன வாயிருக்கும். புலாலை உண்ணும் புலிக்கும் மரக்கறி உண்ணும் யானை, குரங்கு ஒட்டகம் முதலியவற்றிற்குமுள்ள உடல் அமைப்பு வேற்றுமையைப் பாருங்கள். மனிதன் உணவு மரக்கறியே. ஆடு கோழிகளைக் கிழித்து இரக்கமின்றி நறுக்கி அழுக வைத்துப் பிணமருந்தும் மனிதன், மனிதனா? அவனிடம் அகந்தையும் வஞ்சமும் மூர்க்கமும் அறியாமையும் இன்னும் எண்ணிலாத் தீய குணங்களும் குடிப்புகும். ஐம்பெரும் பாதகங்களில் முதன்மையானது கொலை.

நாத்தடிப்பால் மனிதன் புலாலுண்ணக் கடவுள் பெயர் வைத்துக் கொலை செய்கிறார்கள். யாகக் கொலை, பலிக்கொலை. ஆ, யாகம் என்பது தியாகம். அகம்பாவத்தைக் கொன்று, தன்னையே உலக வடிவான ஈசன் பணிக்குப் பலிதானமாக அளிப்பதே யாகம். ஆடுவெட்டிசெய்யும்யாகம் அத்தனையும் பாவம். அதனால் சுவர்க்க போகம் வராது; நரக சோகமே வரும். சுயநலத் தியாகமே சுவர்க்க போகமாகும். இதைச் சொல்லவே புத்தர் எழுந்தார். ஒரு கொலை யாகஞ்செய்வதினும், பல உயிர்கள் பிழைத்து உங்களை வாழ்த்தும் படி தொழில்களை வளர்ப்பது நல்லது.

அந்தோ பராசக்தி, உனக்குமா ஆடு வேண்டும்? அன்பு வடிவே, உன் குழந்தைகளாகிய ஆடு கோழிகளை, உன்னெதிரேயே ஆறறிவு படைத்த மக்கள் வெட்டுவதைப் பொறுத்தா இருக்கிறாய்? புலாலுண்ணும் பாவிகளே! நீங்கள் புலாலருந்தும் பழியைத் தெய்வத்தின்மேல் போடாதீர்கள் ; தெய்வத்தின் பெயரைக் கெடுக்காதீர்கள். உங்கள் மனம் கொலையிலும் தீமையிலும் செல்லுவதால் தான் அம்மனம் போன்ற கொடிய உருக்களைச் செய்து, தெய்வத்திற்கு நீங்கள் உண்ணும் கொடிய உணவைப் படைக்கிறீர்கள். இதுதொன்றுதொட்டு வந்த பழக்கம் என்கிறீர்கள். உங்கள் பாட்டன் அறியாமையால் பாபம் செய்தால் நீங்களும் பாபம்

செய்ய வேண்டுமா? அவன் குடித்தால் நீங்களும் குடிக்க வேண்டுமா? இன்றே இப்பழக்கத்தை நிறுத்துங்கள், தென்னாலியில் பெத்தமாளுக்குப் பதினாயிரக் கணக்கான ஆடுகள் பலி கொடுத்தார்கள். பத்துநாட்கள் பிரசாரம் செய்துமனத்தை கரைத்தேன். பூசாரி என்னை வைதான்; வாளை ஓங்கினான். 'பலி முற்றிலும் நிறுத்தினாலொழிய உணவு கொள்ளேன்' என்று விரதம் பூண்டேன். கலெக்டருக்கு செய்தி எட்டியது. அதிகாரிகளிடம் உண்மையைச் சொன்னேன். பலி கூடாதென்று சர்க்காரே உத்திரவிட்டது. பூசாரி தலைகுனிந்தான். கல்லில் முட்டிக் கொள்ளாதீர்; கடவுளை அன்பு செய்யுங்கள். 'பலிகிலி' எல்லாம் மனிதருட் புகுந்த புலியின் வேலை; அம்மனும் சாமியும் அன்புமயம். தெய்வம் ஒன்றே; அதற்கு நாம்தரும் நிவேதனம் உள்ளன்பே. உலகே பலிபீடம். அதுவே பராசக்தியின் சந்நிதி. அதில் உங்கள் தீயகுணங்களைப் பலியிட்டு ஆணவம் நீத்து அருட்பணி செய்க; அதுவே வேள்வி.

உணவினாலேயே குணநலம் வளர்கிறது. பசி அறிந்து, சுசிருசியான சைவ உணவை அளவுடன் உண்க! நாவிற்கு அடிமைப்பட்டு கண்டதை உண்டால், வயிறு புரட்சி செய்யும்; உடல் நோயுறும். மரக்கறி உண்ணும் குரங்கும் யானையும் எவ்வளவு சுறுசுறுப்பாயிருக்கின்றன! மனிதன் மற்றப் பிராணிகளினும் பெரிய மூளையுடையவன். மனவுறுதி வாய்மை தூய்மை அறிவாற்றல்களால் மனிதன், தனது வாழ்வைத் திருத்தி உலகிற்கும் உதவியாக வாழக் கடமைப்பட்டிருக்கிறான். மனிதன் எதை எதை உண்கிறானோ அதற்குத் தக்க குணத்தையே அடைகிறான். மாமிசம், கள், முட்டை, அழுகல் பதார்த்தங்கள் முதலியவற்றை உண்கிறவன் விலங்குக் குணம் பெருகித் தாமதனாகிறான். ஊனுணவு நின்றால் போர்வெறி தணியும். அறுசுவைகளையும் மிகுதியாக விரும்புகிறவன் உணவிற்கு அடிமையாகித் தன் புலன்களை அடக்கத் திறனற்றவனாகிறான். மிளகாய்க்காரம் அதிகமாக உண்பவன் கோபத்திற்கு ஆளாகிறான்.

நாவடக்கம் வேண்டும்; சுவைகளை வெல்ல வேண்டும். நாம் அவற்றிற்கு அடிமையாகக்கூடாது. உணவுப் பிழை, உறக்கப் பிழை, புணர்ச்சிப் பிழை இவற்றால் உயிர் உடல் மனம் கெடும். குணம் கெடும். மனிதன் நல்ல பழக்கங்களுடன் தேங்காய், கடலை, சுத்தமான பால் முதலியனவற்றையும் உண்டு வந்தால், சாத்வீக புத்தியும், சுறுசுறுப்பும் ஒளியும் பெறுவான். வாயில்லாவுயிர்களை இரக்கமின்றி மனிதன் கொன்றுண்கிறான்; அந்த இரத்தவுணவு பாபவுணவு உயிர்ச் சாப உணவு, கொலை வெறியாக மாறிப் போரில் மனிதரை வாளாலும் குண்டு பீரங்கிகளாலும் கொன்று குவித்துப் பழிவாங்குகிறது. இதுவரை மடவுலகம் போர் என்ற நரவதையால் மனிதனையே மனிதனுக்கு எமனாகும்படி செய்தது. கொலைக்கருவிகள் கண்டுபிடிப்பதில் தன் மூளையைச் செலுத்தி மனிதன் பாழானான். இனி, ஆன்ம சக்தியே உலகிற்பரவும்; ஆன்ம பலத்தினாலேதான் பாரத தேசத்திற்குச் சுதந்தரம் கிடைக்கும். சாத்வீக சக்தி எழுந்தது! இதுகாறும் கொன்றதற்காக வருந்தி, உலகம் கொல்லா விரத்தை உறுதியாகப் பூணப்போகிறது. போரரக்கர் தம் குண்டு பீரங்கிகளுடன் போரில் ஒழிவர். மனிதா! வீண் கேள்வி கேட்டு ஆயுளைக் கொலை செய்யாதே! புலாலுண்ணலையும், கொலையையும் தவிர்; எவ்வுயிர்க்கும் அன்பாயிரு. உலகைச் சாந்த நிலையமாக்கு! புலால் நின்றால் ஆகார சுத்தம் ஏற்படும். அப்போது உலகில் அமைதியும் ஒற்றுமையும் நிலவும், உணர்மின்! கொலைபுலை யொழிமின்! தாவர உணவுகளையே உண்மின்!

# கோழி வடித்திடும்



# கண்ணீர்

—செவ்வேள்

நேற்றிருந்த கோழி இன்று ஊர்வலம்
மரண ஊர்வலம்

இன்னும் கொஞ்ச நேரத்திலே ஜீரணம்
வயிற்றில ஜீரணம்

இரக்கமற்ற மனிதமனம் காரணம்
இதன் காரணம்

கொல்லாமை அருளுடமை சூரணம்
நல்ல சூரணம் (நேற்று)

வள்ளுவரின் குறள் பலவும் படிக்கிறாய்

வள்ளலாரின் பாடல் உருகிக் கேட்கிறாய்

உள்ளத்திலே கருணைமட்டும் மறுக்கிறாய்

உன் ஊன்பெருக்க பிறஉயிரை அறுக்கிறாய்
(நேற்று)

சீராளன் கறிகேட்ட சிவபெருமான்

யாருயிரும் தம்மருளால் கொடுத்திடுவார்

காராட்டுக் கறிகேட்கும் மானிடனே—நீ

கட்டெறும்பின் உயிரொன்றும் தருவாயா? (நேற்று)

எடைபோட்டுப் பார்த்ததிலே உன் உயிர்தான்

ஏற்றமென நினைத்தாயோ நீ மனிதா!

கடைபோட்டு விற்பதற்கும் உன்கறியைச்

சம்மதம்தான் தருவாயோ சொல் மனிதா!

விடை சொல்லத் தெரியாமல் விழிப்பவனே

விட்டுவிடு ஊன் உண்ணல் இன்றுடனே (நேற்று)

# மெய்ப்பொருள் நாயனார்



அருட்செல்வி

''பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்''

என்று அண்மைக் காலத்தில் வாழ்ந்தவரான அமர கவி பாரதியார் நமக்கு அறிவுறுத்தினார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''.

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே பாடினார் பொய்யாமொழிப்புலவர் வள்ளுவனார். இச் சான்றோர்கள் வாக்கிற்கிணங்க சிறந்து விளங்கிய ஒரு நாயனார்தான் ''வெல்லுமா மிக வல்ல மெய்ப் பொருளுக்கடியேன்'' என்று சுந்தரரால் போற்றப் பட்ட மெய்ப்பொருள் நாயனார். சிவ வேடத்திற் குச் சிறப்பு தந்து சிவனடியார்களைப் போற்றி வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காகத் தம் இன்னுயிரையே தந்து தம் அருள் உள்ளத்தால் தம்மைக் கொன்றவரையும் கைதொழுதுவென்றவரான இந்நாயனாரின் சரிதம் வேதத்தினும் விழுமிய சரிதமாகும். பழிக்குப்பழி இரத்தத்திற்கு ரத்தம் என்று வன்முறைகளால் சீரழிந்துவரும் இன்றைய சமுதாயத்திற்கு அருள் நெறியின் மகத்துவத்தைப் போதிக்கும் இச்சான்றோரின் வரலாறு சிறந்த நன் மருந்தாகத் திகழும் என்பது திண்ணம்.

திருக்கோவலூர் சிவபெருமானின் அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. சிவபெருமான் அந்த காசூரனை வென்றது இத்திருக்கோவலூர் திருத் தலத்திலேயே ஆகும். திருஞான சம்பந்தரும் திரு நாவுக்கரசரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இத் தகைய தொன்மைச் சிறப்பு மிக்க திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட சேதிநாட்டை மலாடர் கோமான் ஆகிய மெய்ப்பொருள் நாயனார் ஆண்டுவந்தார். இவருடைய பரம்பரையே மாதொரு பாகராம் சிவபெருமானுக்கு வழிவழி அன்பு செய்து வந்த சைவப் பரம்பரையாகும். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களிடத்தில் அன்புபூண்டு அவர்கள் கருத்தின்வழி ஏவல் செய்வதையே பெரும் பாக்கியமாகக் கருதித் தொண்டாற்றி வந்தவர் ஆவார்.

மெய்ப்பொருள் நாயனார் அறநெறி வழாமல் தம் அரசைப் பாதுகாத்து வந்தார். தம்முடைய தோளாற்றலால் பகைவர்கள் பலரையும் அவர் வெற்றி கண்டுள்ளார். நீதி நேர்மை மிக்க அவர் எப்பொழுதும் வந்தித்து இருப்பது சிவன் திருப்பாதம். எப்பொழுதுமே சிந்தித்திருப்பது சிவனடியார்க்கு ஆற்றிடும் திருத்தொண்டு.

தம்முடைய செல்வம் அனைத்தையும் சிவனார் ஆலயப் பூசைக்கும், சிவனடியார் பாத சேவைக்குமே அவர் செலவழித்துவந்தார். இத் தகைய மெய்ப்பொருள் நாயனாரின் மெய்யான சிவத்தொண்டைச் சேக்கிழார் பாராட்டிப் போற்றுகிறார்.

''மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக்கு அன்பர்
தாளலால் சார்பொன் றில்லார்''

''தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார்''

எனவரும் பாடல்களில் மெய்ப்பொருள் நாயனாரின் சிவத் தொண்டினைச் செம்மையுற விளக்கியுள்ளார் சேக்கிழார்.

சிவவேடம் பூண்ட சிவனடியாரைச் சாதாரண அடியாராக எண்ணாது அவர்களையும் நாயனாராகவே மதித்து வணங்கி அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் வழங்கி உவந்தது மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம். ஆகவேதான் மேல் காட்டிய பாடலில் அடியார்களை அடியார் எனச் சுட்டாமல் சேக்கிழார் ''நாயன்மார் அணைந்தபோது'' என்று மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம் எவ்வாறு உணர்ந்ததோ அவ்வாறே ''நாயன்மார் அணைந்தபோது'' என்று சுட்டிக் ''கொடுத்து வந்தார்'' ''கொடுத்து உவந்தார்'' எனவும் பொருள் கொள்ளத்தக்க வகையில் சொற்களைப் பெய்து கவிகளை வடித்திருக்கக் காண்கிறோம்.

இத்தகைய உத்தமராம் மெய்ப்பொருள் நாயனாருக்கு ஒரு பகைவன் வாய்த்திருந்தான். அவன் பொய்ப்பொருளை நாடும் பித்தன்; மெய்ப்பொருளாரின் மெய்ப்புகழைப் காணச் சகியாத எத்தன்; அவனும் திருக்கோவலூருக்கு அருகிருந்த ஓர் ஊரை குதிரை, யானை, காலாள் படைகளோடு ஆண்டிருந்த ஒரு கொற்றவன்தான். அக்கொற்றவன் மெய்ப்பொருள் நாயனார் மீது பலமுறை படை திரட்டி வந்து போர்புரிந்திருக்கிறான். ஆனால் சிவனடியார்கள் பால் ஈரமும், மாற்றார்களை வெல்லும் மாவீரமும் கொண்டிருந்த மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள அவனால் இயலவில்லை. பலமுறையும் வரைநெடுந்தோள்கள் கொண்ட மெய்ப்பொருளாரிடம் அவன் தோற்று அவமானப்பட்டு ஓடிப்போய்விட்டான். இப்படி வீரத்தால் மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள முடியாத முத்தநாதன் என்ற அந்தவஞ்சகன், சிவனடியார்களுக்கு மெய்ப்பொருளார் அளிக்கும் மரியாதையைப் பயன்படுத்திப் படைகொண்டு சாதிக்க முடியாததை சிவனடியாரின் உடைபூண்டு சாதித்து விட சதித்திட்டம் ஒன்றைத் தன் மனதிற்குள் தீட்டிக் கொண்டான்.

திருவெண்ணீறு சாத்தும் சிவனடியார் வேடம் பெருமைகள் யாவும் சேர்க்கும் பெருவேடமாகும். அப்பெருவேடத்தைச் சிறுமதியாளனாகிய முத்தநாதன் பூண்டு கொண்டுவிட்டான்.

''மெய்யெல்லாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினுள் படைக ரந்த
புத்தகக் கவுளி ஏந்தி

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவசிவ என்ன சிவகதி தானே.**

**—திருமூலர்.**

மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன்''

என்று முத்தநாதன் பொய்தவ வேடம் பூண்டமையைச் சேக்கிழார் பாடுகின்றார்.

திருநீறு அணியாத நெற்றி பாழ் என்பது பழமொழி. உண்மை அன்புடன் அணிவாரின் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களையும் சுட்டு நீறுபடுத்துவதால் திருநீற்றிற்கு அப்பெயர் வந்தது.

''கங்காளன பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும், சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே''.

என்று திருநீறு அணிவதனால் உண்டாகும் பலன்களைத் திருமூலர் கூறியுள்ளார். வினைகளை நீறுபடுத்துவதாகிய திருநீற்றை உடலில் பதினாறு அல்லது பன்னிரண்டு இடங்களில் மூன்று கீற்று வடிவமாகவேனும் (திரிபுண்டரிகம்) அல்லது பரவவேனும் (உத்தூளனம்) பூச வேண்டும் என்பது விதி. வினைகளைப்போக்க வல்ல திருநீற்றினையேமுத்தநாதன் மெய்யெலாம் பரவப் பூசிக் கொண்டுவிட்டான். அவ்வாறு பூசிய அளவிலேனும் அவனுடைய உள்ள மாசு நீங்கியதா எனில் நீங்கிடவில்லை. நஞ்சே வடிவமான முத்த நாதனின் மனத்தைப் பக்குவம் செய்திட இன்னும் அவன் பலகாலும் திருநீறு பூசியாகவேண்டும்.

தீபத்தை ஏற்றும்போது அத்தீபச் சுடர் அறை முழுதும் உள்ள இருளை அகற்றினாலும் கூட, தான் எரியும் திரியின் கீழுள்ள இருளை அகற்ற அதனால் ஆவதில்லை அல்லவா! அவ்வாறே முத்தநாதன் பூசிக்கொண்ட திருநீறும், கட்டி முடித்துக்கொண்ட சடாமுடியும் காண்பார் மனமாசைப் போக்குவன போல் சுடர் கொண்டு திகழ்ந்திட்ட போதும், அவன் கொண்டவேடம் அவனுடைய மனஅழுக்கை அகற்றவில்லை; எதைப்போல என்றால் ''மை பொதி விளக்கு போல்'' என்று உவமை கூறுகிறார் சேக்கிழார். மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லும் தீய எண்ணத்தோடு ஆயுதம் மறைத்து வைத்திருக்கும் புத்தகத்தைக் கையினில் ஏந்தியவனாகப் பொய்யான தவ வேடம் பூண்டுத் திருக்கோவலூருக்குளளே புகுந்துவிடுகிறான் முத்தநாதன்.

சிவனடியார் எந்நேரமும் தம்மைக்காணத் தடையின்றி வருமாறு ஆணை பிறப்பித்திருந்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் பொய் தவ வேடம் பூண்ட முத்தநாதனும் தடையின்றித்

திருக்கோவலூர் நுழையவும், எங்கும் தடையின்றி அரண்மனைக்குள் நுழையவும் அதற்குப் பிறகு அரசன் உறங்கிக் கொண்டிருக்கும் அந்தப்புரத்திற்கே வரவும் எளிதாக அவனுக்கு முடிகிறது. சிவனடியார்களைச் சிவபெருமானாகவே மதித்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் முத்தநாதன் சிவ வேடம் பூண்டுவர அவனையும் கூட ''உடையவர்தாமே வந்தார். உள்ளெழுந்தருளும்'' என்று தடையின்றி அரண்மனைக்குள் நுழைய அனுமதித்து விடுகிறார்கள் காவலர்கள்.

மெய்ப்பொருள் நாயனாரின் அந்தப்புரத்தைக் காவல் செய்து நிற்பவன் தத்தன். இவன் மெய்ப்பொருள் நாயனாரின் குறிப்பறிந்து செயல் படக்கூடிய மெய்க்காவலன் ஆவான். குறிப்பில் யாரையும் உணரக்கூடிய தத்தன், தவவேடம் பூண்டு வந்திருக்கும் முத்தநாதனையும் கூட அவன் முகக் குறிப்பிலிருந்தே ஐயத்திற்கிடமானவனாகத் தெரிந்து கொண்டுவிடுகிறான். ஆகவே அவனைத் தடுத்து ''அரசர் உறங்கக்கூடும், சமயம் பார்த்துச் செல்ல வேண்டும்'' என்று கூறுகிறான். இவ்வாறு தத்தன் தடுத்தும் கேளாத முத்தநாதன் '' நான் அரசருக்கு மெய்ப்பொருளை உரைக்கச் செல்கிறேன். நீ தடுக்காமல் இங்கேயே நில்'' என்பதாகத் தத்தனைத் தள்ளிக்கொண்டு அந்தப்புரத்துக்குள்ளும் நுழைந்துவிடுகிறான்.

முத்தநாதன் நுழையும்போது மெய்ப்பொருள் நாயனார் கட்டிலில் கண்மூடியவாறு இருக்க, அவர் அருகிலேயே அரசியாரும் அமர்ந்து பாதசேவை புரிந்துகொண்டு இருக்கிறார். சிவனடியாரைக் கண்டவுடன் அரசியார் வேகமாகக் கட்டிலைவிட்டுக் கீழிறங்கி, அரசரையும் எழுப்புகிறார். அந்தப்புரத்திற்குள் நுழைந்த சிவனடியாரைக் கண்டதும் கதுமென அரசியார் கட்டிலில் இருந்து எழுவதும், அடியாரை யார் எவர் என விசாரியாமலே அரசரை எழுப்புவதும் மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களுக்குத் தந்திருக்கும் பெரு மதிப்பினையே நமக்குப் புலப்படுத்துகின்றன. கணவனார் கருத்தறிந்து செயற்படும் கற்புக்கரசியான தேவியாரின் குணச்சிறப்பையும் கூட இந்நிகழ்ச்சியால் அறிகிறோம்.

அரசியார் எழுப்ப எழும் மெய்ப்பொருள் நாயனார் சிவனடியாரைக் கண்டதும் மகிழ்ச்சி மிகக் கொண்டவராய் ''அண்டர் நாயகனார் தொண்டராம்'' என உரைத்தவாறு தமது செங்கைகளைக் குவித்து வணங்கி வழிபடுகிறார்.

''மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்த
தென்ன இங்கெழுந் தருளப் பெற்ற தென்
கொலோ''

என்று கூறியும் வரவேற்கிறார் மெய்ப்பொருள் நாயனார். ''என் வாழ்வில் மங்கலம் மேலும் வந்து கூடிற்று'' என்று மெய்ப்பொருள் நாயனார் கூறி முத்தநாதனை வரவேற்கிறார். முத்தநாதனால் அவருடைய மங்கலம் மிக்க வாழ்வு முடியவே போகிறது அல்லவா! அதனாலே சேக்கிழார், மெய்ப்பொருள் நாயனாரின் வாழ்வு முடியப்போகிறது என்பதையும் நமக்குக் குறிப்பில் உணர்த்துவதற்காக ''வாழ்வு வந்து அணைந்தது'' (நீங்கியது) எனப்பொருள் கொள்ளும் வகையில் பாடியிருக்கும் நயமும் இங்கே நாம் உணர்தற்குரியது.

இப்படி மெய்ப்பொருள் நாயனார் அகம் மகிழ்ந்து வரவேற்க தவவேடத்தில் இருந்த முத்தநாதன் ''உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல் எங்கும் இல்லாததொன்று கொண்டு வந்தேன், இயம்ப'' என்று கூறுகிறான்.

**அரகர என்ன அரியதொன் றில்லை**
**அரகர என்ன அறிகிலர் மாந்தர்**
**அரகர என்ன அமரரும் ஆவர்**
**அரகர என்ன அறும்பிறப் பன்றே.**

—திருமூலர்.

சிவபெருமான் மெய்ப்பொருள் நாயனார்க்கே உரிய நாயகன்; போலிவேடம் பூண்டிருக்கும் தனக்கு நாயகன் இல்லை என்பதாலே ''உங்கள் நாயகனார்'' என்று முத்தநாதன் உரைக்கக் காண்கிறோம். எங்கள் நாயகனார் என்று அவன் கூறாமல் ''உங்கள் நாயகனார்'' என்று உரைத்தமையால் அவனுடைய வேடத்தில் தான் சிவம் இருந்ததேதவிர அவனுடைய உள்ளத்தில் இல்லை என்பதை அவனே ஒப்புக் கொண்டு உரைத்து விடுவதையும் காண்கிறோம். ஆனாலும் மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனின் வேடத்தில் எப்படி ஐயம் கொள்ளவில்லையோ, அப்படியே அவனுடைய வார்த்தையிலும் கூட ஐயம் ஒன்றும் கொள்ளாமல் ''நாயகனார் உரைத்த ஆகம நூலின் பொருளை எனக்கு அறிவிக்க வந்தீர்களா? இதைக் காட்டிலும் எனக்கு வேறு பேறு என்ன இருக்க முடியும்? இப்பொழுதே எனக்கு எம்பிரான் அருள்செய்த ஆகமத்தை வாசித்து அருள் செய்ய வேண்டும்'' என்று பணிந்து வேண்டுகிறார். அதற்கு பொய்த்தவ வேடம் பூண்டவனான வஞ்சநாதன்

''நாறுபூங் கோதை மாது தவிரவே நானும்
நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்.''

என்று கூறுகிறான். அரசி அவ்விடத்தைவிட்டு அகல வேண்டும் என்பதையே முத்துநாதன் இத்தொடரால் கூறியிருக்கிறான். சேக்கிழார் தம்புலமைத்திறத்தால் ''வாசனை மிக்க மலர்களை இனி அரசி அணிந்து கொள்வது தவிரப்போகிறது. நானும் உன்னைக் கொன்று நரகமாகிய ஓரிடத்தை அடைந்துவிடுவேன். சிவலோகமாகிய வேறிடத்திற்கு நீரும் சென்றுவிடப் போகிறீர்'' என்று மெய்ப்பொருள் நாயனாரிடம் உரைப்பதைப்போல இருபொருள் படுமாறு இத்தொடரை அமைத்திருக்கும் நயமும் இங்கே எண்ணி மகிழ்தற்குரியது.

முத்தநாதன் வேண்டிக் கொண்டபடியே, திருமகளை ஒத்த அரசியாரை அகலுமாறு மெய்ப்பொருள் நாயனரும் கூற, கணவன் சொல்லுக்கு மாறுகூறி அறியாத அரசியும் உடன் அவ்விடத்தை விட்டு அகன்றுவிடுகிறார். முத்தநாதனை உரிய ஆசனம் தந்து அமரச் செய்யும் மெய்ப்பொருள் நாயனார், தாம் தரைமேல் அமர்ந்தவராய் ''இனியருள் செய்யுங்கள்'' என்று வேண்டுகிறார். உடனே முத்தநாதனும் புத்தகத்தைத் திறப்பதை போலத் திறந்து அதற்குள் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் படைக்கருவியை எடுத்து வணங்கி நின்றிருக்கும் மெய்ப்பொருள் நாயனார் வயிற்றில் அதனைப் பாய்ச்ச, அப்பொழுதும் மெய்ப்பொருள்

நாயனார் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' என்று சிவனடியாரை வணங்கித் தொழுகிறார்.

''கைத்தலத் திருந்த வஞ்சக் கவுளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார்.''

என்கிறார் சேக்கிழார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல விழைந்து ஊருக்குள் நுழைந்தபோது அவனுடைய தீய நோக்கத்தைக் கூறமுற்பட்டபோதும் ''இகலினால் வெல்ல மாட்டான் அற்றத்தில் வெல்வான் ஆக'' என்று அமங்கலச் சொற்பெய்தலின்றிச் சேக்கிழார் அவன் நோக்கத்தைச் சுட்டினார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திவிட்டதைக் கூறும் இப்போதும் ''தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய'' என்று அமங்கலச் சொல் இன்றிச் சுட்டியிருக்கும் சிறப்பு எண்ணி எண்ணிப் போற்றுதலுக்குரியதாகும். மேலும் மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனுக்குத் தோற்றிடவில்லை, அவனுக்குத் தம் இன்னுயிரைக் கொடுத்து வென்றுவிட்டார். மடிந்துவிழுந்தபோதும் ''யூ டு சிவனடியார்?'' என்று சிவனடியாரை மனதாலும் நொந்துகொண்டு விடாமல் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார்'' என்று பாடியிருப்பதைக் காணும் போது அவர்தம் பண்பின் உயர்வைக் கண்டு நாமும் பூரிக்கிறோம்.

முத்தநாதன் அந்தப்புரத்திற்குள் நுழையும் போதே தத்தன் என்ற மெய்க்காப்பாளன் ஐயம் கொண்டான் என்பதைப் பார்த்தோம். அவன், சிவனடியார் உள்ளே நுழைந்தபிறகும் சிவனடியாரால் அரசருக்கு ஆபத்து ஏதேனும் உண்டாகுமோ என்று சந்தேகத்துடனேயே இருந்திருக்கிறான். தான் கொண்ட ஐயத்திற்கு இணங்கவே சிவனடியார் மறைத்திருந்த கொலைக் கருவியை எடுத்து முடிக்கக் காணும் தத்தன், தன் உடைவாளை ஓங்கியவாறு முத்தநாதனை வெட்ட ஓடிவருகிறான். அப்பொழுது இரத்தம் சோர தரைமேல் வீழ்கின்ற மெய்ப்பொருள் நாயனார் ''தத்தாநமர்'' (தத்தா! இவர் நம்மவர் என்பது பொருள்)''என அவனைத் தடுத்துத் தரையில் வீழ்கிறார்.

''மறைத்தவன் புகுந்த போதே
மனம் அங்கு வைத்த தத்தன்
இறைப் பொழு தின்கட்கூடி
வாளினால் எறிய லுற்றான்

நிறைத்த செங்குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் ''தத்தா
நமர்'' எனத் தடுத்து வீழ்ந்தார்''.

முத்தநாதன் வயிற்றில் வாளைப் பாய்ச்சியது கூட மெய்ப்பொருள் நாயனாரை மனம் நோகச் செய்யவில்லையாம். தன்னை நாடிவந்திருக்கும் சிவனடியாரை வெட்ட வாளோங்கிய தத்தன் செயல்தான் மெய்ப்பொருள் நாயனாரை மிகுந்த மன வேதனைக் குள்ளாக்கியது என்பதைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார்.

# அரச மரத்துப் பிள்ளையார்

அரசமரமும் வேப்பமரமும் சேர்த்து வைக்கப் பெற்று அம்மரங்களின் அடியிலிருக்கும் பிள்ளையாரே மிகவும் சிறந்தவராகக் கருதப்படுகிறார். அம்மரங்கள் விநாயகருக்கு நிழல் தருவதற்காக மட்டும் வைக்கப்பட்டவை அல்ல. வழிபடும் பக்தர்களுக்கும் அவை நிழல் தந்து ஆதரிக்கின்றன. அவை மருந்தாகவும் உதவுகின்றன.

கதிரவன் தோன்றும் காலைநேரத்தில் குளித்து ஒரு குடத்தில் அல்லது செம்பில் நீர் கொண்டு சென்று அரச மரத்தடியில் உள்ள அப்பிள்ளையாரை முழுக்காட்டி ஒரு சிறு அறுகம் புல்லை அவர் முடிமேல் வைத்து அவரை அம்மரங்களோடு சுற்றிவரும் அடியார்களுக்கு உடலிலுள்ள நோய்கள் எல்லாம் பறந்தோடும்படி அங்குள்ள காற்றே செய்துவருகிறது. கருப்பைக் கோளாறினால் கருதரிக்காமல் வாடும் பெண்கள் காலையில் அக்காற்றை உட்கொள்ளும்போது கருப்பையிலுள்ள தீயபுழுக்கள் அழிந்துபின் கருத்தரிக்க வழி உண்டாகிறதென்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

''வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனாம் தத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன
எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ என்றார்''

என்பது சேக்கிழார் காட்டும் அடுத்த பாடல். முத்தநாதனை வெட்டப் போன தன் செயல் அரசரை மிகுதியும் மனவருத்தத்திற்கு ஆளாக்கி விட்டது என்பதையும் தத்தன் புரிந்து கொண்டு விடுகிறான். ஆகவேதான் மீளவும் முத்தநாதனை வெட்ட வாளினை அவன் ஓங்கிடாமல் தரையில் விழப்போகும் மெய்ப்பொருள் நாயனாரைத் தான் தாங்கி ''இப்பொழுது நான் என்ன செய்வது?'' என்று அரசரை வினவுகிறான். மெய்ப்பொருளாரும் ''சிவபெருமானின் அடியார் எந்தத் தீங்கும் இன்றி பத்திரமாக வெளியேறும் வண்ணம் நீயே கொண்டுபோய் விட்டுவா'' என்று தத்தனுக்கு ஆணையிட, பொய்தவ வேடதாரியான முத்தநாதனுக்குக் காவலாகத் தத்தனே உடன் போகிறான்.

இதற்குள் மெய்ப்பொருள் நாயனார் போலி சிவனடியார் ஒருவரால் குத்தப்பட்ட செய்தி நகரில் வேகமாகப் பரவ அரசரைக் குத்திய முத்தநாதனைக் கொல்ல ஏராளமான மக்களும் படையினரும் திரண்டு வருகிறார்கள். ஆனால் தத்தனோ ''இவன் பத்திரமாகச் செல்லவேண்டும் என்பது அரசரின் கட்டளை'' என்று கூற, முத்தநாதனைத் தண்டிக்காமல் எல்லோரும் அவனை அரசன் விரும்பியவாறே பத்திரமாக நாட்டை விட்டு வெளியேற அனுமதித்து அரசன் ஆணைக்கு அஞ்சி ஒதுங்கிச் சென்று விடுகின்றனர்.

தத்தன் அரண்மனை திரும்பும் வரையில் மெய்ப்பொருள் நாயனாரும் தம் உயிரைத் தாங்கியவாறு காத்து இருக்கிறார். சிவனடியார் பத்திரமாகச் சென்றார் என்பதைக் கேட்க வேண்டி சோர்கின்ற ஆவி தாங்கும் கொற்றவன் முன்பு, கோமகன் குறிப்பில் நிற்கும் தத்தன் சென்றான் என்று கூறுகிறார் சேக்கிழார். பத்திரமாகச் சிவனடியார் சென்றுவிட்டார் என்பதைத் தத்தன் கூற மெய்ப்பொருள் நாயனார் எவ்வாறு மகிழ்ச்சி கொண்டார் என்பதையும் சேக்கிழார்

''சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக்கு ஐயன் செய்தது
யார் செய்ய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறை பெருங் கருணை கூர்ந்தார்''

என்று பாடியிருக்கிறார்.

யாரோ ஒருவர் சிவனடியார் வேடம் பூண்டு தமக்கு இன்னல் செய்துவிட்டார் என்பதனால் பெருமைமிக்க சிவவேடத்தைச் சிறுமைப்படுத்தும் சிறிய செயலை மெய்ப்பொருள் நாயனார் செய்திட விரும்பவில்லை. மேலும் சிவபெருமானின் திருவருள் விருப்பத்தினால்தான் சிவனடியார் ஒருவரால் தம்முயிர் நீங்கப்பெறும் இச்செயலும் நிகழ வேண்டும் என்பதும் மெய்ப்பொருள் நாயனாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. பொன் பொருளை விரும்பும் அடியார்களுக்கு எவ்வாறு அவற்றை உவப்போடு வழங்க மெய்ப்பொருள் நாயனார் சித்தமாய் இருந்தாரோ அவ்வாறே தன்னுடல் உயிரையும் கூட சிவனடியார்க்கே உவப்போடு வழங்க அவர் சித்தமாகவே இருந்தார். தம்முயிரை வேண்டி அதனைப் பெறுவதற்காக வேனும் முத்தநாதன் சிவவேடம் பூண்டானே என்று மகிழ்ச்சியே கொண்டது மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம். ''மந்திரமாவது நீறு'' என்ற ஆன்றோர்களின் வாக்கிற்கிணங்க முத்தநாதன் உயிரைக் காக்கும் மந்திரமாக அவன் பூசிய நீறும், அவன் பூண்ட வேடமும் காவல் ஆக வேண்டும், ஆகவே அவன் பத்திரமாக உயிர் பிழைத்துச் சென்று, தன்னுயிரைக் காப்பாற்றிய சிவவேடத்தின் பெருமையை எண்ணி எண்ணி உருக வேண்டும், என்றென்றும் முத்தநாதனும் கூட சிவவேடத்தின் பெருமையை உணர்ந்து அதனைப் பூண்டு இனியேனும் அவன் திருந்தி வாழவேண்டும் என்பதற்காகவும் அவன் பத்திரமாக உயிர்பிழைத்துச் செல்லவேண்டும் என்று மெய்ப்பொருள் நாயனார் விழைந்தார். ஒருவர் அல்லது ஓரிருவர் சிவவேடம் பூண்டு தவறு செய்வார்களேயானால் அதற்காக அவரைப் பழிப்பதும் தண்டிப்பதும் கூட சிவவேடம் பூண்ட சிவநேய செல்வர்கள் எல்லோரையும் பழிப்பதும் தண்டிப்பதும் ஆகிவிடலாம். அதனால் சிவவேடம் தரித்து சிவநேயத்தை வளர்க்கும் சான்றோர்கள் சமுதாயத்தில் அருகி மறைந்து போய்விடலாம் என்றும் அஞ்சியது மெய்ப்பொருள் நாயனாரின் திருவுள்ளம். ஆகவேதான் முத்தநாதன் பூண்ட சிவவேடம் எல்லாக் காலத்திலும் பெருமையோடு போற்றப்பட வேண்டிய ஒன்று என்பதனையும் ஒரு சிலரின் தவற்றிற்காக மிகப் பெரிய சமுதாயத்தைத் தூய்மைப்படுத்த வல்ல சிவவேடத்தை-தவவேடத்தைப் பழிப்பிற்கு உள்ளாக்கி விடக்கூடாது என்ற கருத்தை உலகிற்கு உணர்த்திடும் பொருட்டாகவும்தான் மெய்ப்பொருள் நாயனார் சிவவேடம் பூண்ட முத்தநாதன் பத்திரமாகச் செல்லவேண்டும் என்று விரும்பினார்.

— — —

## மரம் முந்தினதா ? வித்து முந்தினதா?

மரத்தைப் பார்த்த மனிதன் அது வித்திலிருந்து முளைத்து வளர்ந்திருப்பதை உணர்ந்தான். வித்தில்லாமல் மரம் ஏற்பட முடியாது என்றும் அறிந்தான்.

வித்தைத்தர மரம் வேண்டும் என்பது புரிந்தது. மனிதன் சிந்தனையிலே இப்போது குழப்பம் வந்துவிட்டது. மரம் முந்தினதா? வித்து முந்தினதா என்ற கேள்வி எழுந்தது.

ஒன்றில்லாமல் இன்னொன்று தோன்றவே முடியாது. ஆகவே அந்த ஒன்றை எவரோ ஒருவர் முதலில் படைத்திருக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஒவ்வொரு மரமும், செடியும், பறவையும், விலங்குகளும் பிறபொருள்களும் எவராலோ எப்போதோ படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் உணர்ந்தான். அப்படிப்படைத்தவன் யார்? அந்த மூலகர்த்தா யார்? அவனே கடவுள்.

**—புலியூர் கேசிகன்.**

அவ்வாறே பத்திரமாக சென்றார் சிவனடியார் என்று தத்தன் கூறக்கேட்டதும் பரமானந்தம் அடையும் அவர் தத்தனையும் ''ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்'' என்று கூறிப் போற்றுகிறார்.

'' ஐயன் எனக்கருளியவாறு ஆர்செய்வார்
அச்சாவோ ''

என்பது திருவாசகத் தொடர். ஐயன் என்று மாணிக்கவாசகர் ஈசனை உவந்துரைப்பதைப் போலவே மெய்ப்பொருளாரும் தத்தனைப் போற்றியிருப்பது காண்க.

தம்மைச் சூழ நின்றிருக்கும் தம் சுற்றத்தார் அரசியல் ஆயத்தார் அனைவருக்கும் ''விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துஉய்ப்பீர்'' என்று மெய்ப்பொருள் நாயனார் அதற்குப் பிறகு அறிவுரை கூறுகிறார். ''முறைப்படி திருநீற்றுச் சிறப்புணர்ந்து அதனைப் பாதுகாத்து உய்யுங்கள்'' என்று மெய்ப்பொருள் நாயனார் கூறியதாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். ''யான் இறைவன் திருவடி இவ்விதம் சேரவேண்டும் என்பது இறைவன் இட்டிருக்கும் விதி. அதன்படியான் சேர்கிறேன். என்னை ஒப்ப நீங்களும் திருநீற்றுத்தவ வேடத்தை மதித்து வாழுங்கள்'' என்று நமக்கு அறிவுறுத்துவதாகவும் இத்தொடரின் பொருளை நாம் கொள்ளலாம்.

ஆகவே சேதி நாட்டு மன்னராக வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனார் உலக மக்களுக்கு வழங்கியுள்ள சேதியாவது ''விதியினாலே பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர்'' என்பதாகும். மெய்ப்பொருள் நாயனார் இச்சேதியை உலகிற்கு அருளி சிவபெருமானின் அருட் காட்சியையும் அப்பொழுதே கண்டுமகிழ்ந்து, அவனருளால் அவன் தாள் நிழலே சேர்ந்துவிடுகிறார். நாமும் மெய்ப்பொருள் நாயனார் காட்டிய வழியில் மெய்ப்பொருளை விழைந்து வாழ்ந்து ஈசனார் பொன்னார் திருவடிப் பேற்றினைப் பெற்று உய்வடைவோமாக.

— — —

# அன்னையும் ஆயினள்

டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

அம்பிகையினை ''எங்கள் சங்கரனார் மனை மங்கலம்'' என்று குறிப்பிட்ட அபிராமி பட்டர் ஒரு பாடலில் அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் என்கிறார். மனைவியாய் இருப்பவளே அன்னையும் ஆவது எங்ஙனம்? சித்தாந்த வழியாகவும் உலகியல் வழியாகவும் புராண வரலாறுகள் வழியாகவும் இக்கருத்தினை ஆய்வோம்.

**சித்தாந்த வழியான விளக்கங்கள்**

1. விதைத்த விதையிலிருந்து செடிதோன்றுகிறது. அதே செடியிலிருந்து விதை தோன்றுகிறது. அதனின்றுமீண்டும் செடிதோன்றுகிறது. ''செடிக்கு விதை தாய், பின் விதைக்குச் செடி தாய்'' இவ்வாறு உயிரியல் சுழற்சி நடைபெறுகிறது. அதுபோல் சிருஷ்ட்டியின் காரணமாக சிவத்தினின்று சக்தியும் சக்தியினின்று சிவமும் தோன்றுதல் உண்டு. ''செடியா? விதையா? எது முதலில் தோன்றியது?'' என்பது ஆய்வுக்கும் அறிவுக்கும் எட்டாத வினாவாகவே நற்கிறது. அவ்வாறே இரண்டல்லாத சிவசக்தி சிருஷ்டி காரணமாக பிரிந்தும், விரிந்தும் இணைந்தும், கிளைத்தும் செயல்படுகின்றன.

''வாயும் மனமும் கடந்த மனோன்மணி

பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்

தாயும் மகளும் தாரமுமாமே''

எனத் திருமந்திரம் அவர்களின் கடந்துநின்ற நிலைகளைக் கூறி உறவாகும் முறைமையினையும் குறிப்பிடுகிறது.

2. ''இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமயன்'' என்கிறது திருவாசகம். சக்தி இமவான் பெண்ணான பொழுது அவனை மணந்ததால் இறைவன் கணவனாகிறான். பராசக்தியினின்று சிவ சைதன்யம் தோன்றுவதால் சிவன் சக்திக்கு மகன் ஆகிறான். சக்திக்குப் பிறப்பிடம் சிவமாய் இருப்பதால் இறைவன் அவளுக்குத் தகப்பன் ஆகிறான். தோற்றத்துக்கு வருகிற சக்திக்குமுன்பே சிவம் இருப்பதால் அவன் சக்திக்கு அண்ணன் ஆகிறான்.

''சிவம் சக்தி தன்னை ஈன்றும்

சக்திதான் சிவத்தை ஈன்றும்

உவந்து இருவரும் புணர்ந்து இங்கு

உலகுயிர்கள் எல்லாம் ஈன்றும்

பவன் பிரமச்சாரி ஆகும்;

பால் மொழி கன்னி ஆகும்;

தவம் குரு ஞானத் தோர்க்குஇத்

தன்மைதான் தெரியுமன்றே''.

என்ற சிவஞான சித்தியார் சூத்திரம் சிவசக்தி பரஸ்பரம் தங்களை ஈன்றும் பின் உலகினை ஈன்றும் அவர்கள் முறையே பிரம்மச்சாரியாகவும், கன்னியாகவும் இருக்கும் தன்மையினைக் குறிப்பிடுகிறது. இது என்ன தத்துவம்? ஏதும் விளங்கவில்லையே என சிலர் எண்ணக்கூடும். ''தவந்தரு ஞானத்தோர்க்கு இத்தன்மைதான் தெரியுமன்றே'' என்ற அடியால் இத்தத்துவத்தைத் தெளிவாக உணரத்தவப்பயனால் கிட்டிய ஞானம் வேண்டும்'' என்கிறார் அருணந்தி சிவாச்சாரியார். இச்சித்தாந்த சூத்திரத்துக்கு ஓர் இலக்கியம் வகுத்தாற்போல அபிராமி பட்டரும் இத்தத்துவங்கூறும் பாடலினை ''தவளே'' என்றே துவங்கும் நயம நோக்கத்தக்கது.

**உலகியல் வழியான விளக்கங்கள்**

1) உலகியலில் ஒரு குறிப்பட்ட காலத்துக்குப் பின் மனைவியினைத் தாய்போல் எண்ணித் தூய் வாழ்வு நடத்துவது மேன்லமயான நெறியாகும். இராமகிருஷ்ண பரம்ஹம்சரும் காந்தியடிகளும் அதுபோன்ற வாழ்வு நடத்திக் காட்டியுள்ளனர். இறைவனது இல்லறம் அத்தகைய மேன்மை உடையதாகையால் ''அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள்''

2) தாய்க்குப்பின் தாரம் என்பது பழமொழி. அதாவது பால் நினைந்தூட்டும் தாயினைப்போல் கணவனின் பசிவேளை அறிந்து உணவு வழங்குதல் போன்ற இயல்புகளைப் பெற்று மனைவி வாழ வேண்டும். அல்லது எப்போதும் கணவனின் நலனி லேயே கருத்துடையவளாய் இருத்தல்வேண்டும். ஒருவனின் தாய் அப்படி நலனைப் பேணுகிறாள். பின்னால் மனைவி அந்த நிலைக்கு உயருகிறாள். அல்லது உயரவேண்டும். இதனையே இப்பழமொழி உணர்த்துகிறது. தாயுமிலி தந்தையுமிலி யாகிய இறைவனின் மனைவி அப்படி உயர்ந்து அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள்.

3. மற்றும் மனைவியின் பண்புகளை விளக்கும் பாடல் ஒன்று, மனைவி பள்ளியறையில் தாசியாக வும், ஆலோசனை வழங்குவதில் அமைச்சராகவும், நலனைப் பேணுவதில் தாயாகவும் இருக்கவேண்டு மென்று குறிப்பிடுகிறது. சதாசிவபதிவிரதை யாகிய அன்னை அங்ஙனம் அவர்தமக்கு அன்னை யும் ஆவதில் வியப்பில்லை.

4. இவ்வுலகியல் அநுபவத்தினைக் காலஞ் சென்ற கவிஞர் கண்ணதாசன் அழகாகவும் எளிமை யாகவும் பாடியுள்ளார். மனைவிதன் மனதினாலும் நினைவினாலும் தாயாகவேண்டும் என்பதனையும் அவளது அன்பினால் அவன் சேயாகிறான் என்ப தனையும் ''மனதாலும் நினைவாலும் தாயாக வேண்டும் நீயாகவேண்டும்; மடிமீது விளையாடும் சேயாக வேண்டும், நானாகவேண்டும் என்கிறார்.'' இது மிகவும் பிரபலமான பாடல். எப்போதும் சிவச்சிந்தனை நிறைந்த மனதாலும் நினைவாலும் அவளே அவர்தமக்கு அன்னையும் ஆனாள்.

## புராணவரலாறு வழியான விளக்கங்கள்

1. அவளே அன்னை''என்னாது'' அவளே அன்னையும் ஆயினாள்'' என்கிறார். சில காரணங் களுக்காக, சில அருட்செயல்களுக்காக அவளே அன்னை ஆனாள் என்பது இதனால் புலப்படுகிறது.

அநுசூயா தேவியின் கற்பின் பெருமையினை உலகுக்குக் காட்ட எண்ணிய மும்மூர்த்திகளும் அவளிடம் வந்து ஒருவேளை உணவளிக்க வேண்டி னர்; திருவமுது பரிமாறுவோர் ஆடையின்றி இருத்தல் தங்களின் 'சம்பிரதாயம்' என்றனர். அப்போது அநுசூயை தன் கற்பின் ஆற்றலால் மும்மூர்த்திகளையும் சிறுகுழந்தைகளாக ஆக்கிவிட் டாள், தங்கள் கணவன்மார்களை மீட்டுச் செல்ல கலைமகளும், மலைமகளும், அலைமகளும் அநு சூயையின் ஆசிரமத்திற்கு வந்தனர். ஒரே அச்சில் வார்த்தெடுத்தாற்போன்ற மூன்று குழந்தைகளுக் குள் சிறிதும் வேறுபாடுகாண இயலாமல் நின்ற தேவியர்க்கு அநுசூயையே அடையாளங் காட்டி னாள். மூவர் தேவியரும் குழந்தையான கணவனை தூக்கிச் சென்றனர். அநுசூயா தேவிக்கு அருட் செய்த இத்திருவிளையாட்டின் போது சங்கரன் குழந்தை ஆக சங்கரி அவளைத் தாய்போல் எடுத்துச் சென்றாள். அப்போது அன்னை ஆனாள்.

2. இராவணனைப்போலவே அவனது மனைவி மண்டோதரியும் சிறந்த சிவபக்தி உள்ள வள். தனது பூஜை அறையில் இறைவனை அவள் வணங்கி வழிபடுவாள். அவளது பக்திக்கேற்ப அருள்செய்ய இறைவனும் தினசரி மண்டோதரியின் முன் ஒவ்வொரு திருக்கோலம் காட்டி மறைவான். அவ்வாறு அருள்செய்யும்பொழுது, ஒரு நாள், சிவ பெருமான் கட்டழகமைந்த வாலிபனாகக் காட்சி தந்தான். கரங்கூப்பி அடிபணிந்த மண்டோதரி யிடம் பல மெய்ஞானக் கருத்துகள் பற்றிப் பேசவும் செய்தாள். அந்த நேரம் இராவணன் போர்க்களத்திலிருந்து இல்லம் திரும்பினான். ''மண்டோதரி'' என்று அழைத்தபடி அறைக் கதவைத் தட்டினான். அங்கோ ஒரு வாலிபனின் குரல் கேட்கிறது. கொதிப்படைந்த இராவணன் யாரடா அங்கே? என்றபடி வாளினை உருவினான். அக்கணமே இறைவன் வாலிபக்கோலம் விடுத்து சிறுகுழந்தையாகிவிட்டான். (திருவிளையாடற் புராணத்தில் விருத்தகுமாரபாலரான படலம் இதே போன்ற நிகழ்ச்சியைக் காட்டுகிறது) மண்டோதரி கதவைத் திறந்தாள். இராவணன் குழந்தையினைக் கண்டான். யார் இது?'' என்றான். ''ஒரு பெண் இக்குழந்தையினை சிறிது நேரம் என்னிடம் பார்த் துக்கொள்ளக் கொடுத்துச் சென்றாள்'' என்றாள் மண்டோதரி. அச்சமயம் அங்கு நுழைந்த பெண் மணி ''மண்டோதரி என் குழந்தையைக்கொடு'' என்றார். மண்டோதரி அவ்வாறே குழந்தையினை அவளிடம் கொடுத்தாள். அப்பெண்மணிவேறு யாருமல்ல, அம்பிகைதான். மண்டோதரிக்கு இறைவன் அருள்பாலித்த திருவிளையாடலின போது அம்பிகையே அவர்தமக்கு அன்னையும் ஆனாள்.

3. திருமாலின் அவதாரமாகிய ஹயக்ரீவ[r] அகத்தியப் பெருமானுக்கு அன்னையின் சகஸ்[ர] நாமங்களையும் உபதேசித்தார். 'ஸ்ரீமாதா' என்[று] துவங்குகிறார் ஹயக்ரீவர். அகத்தியருக்கு உட[னே] ஐயம்! அன்னை வயிற்றில் தோன்றாது குடத்தி லிருந்து தோன்றிய அவருக்கு 'ஸ்ரீமாதா' என்ற நாமத்தின் பொருள் விளங்கவில்லை. 'ஸ்ரீமாதா' என்றால் சிறப்புமிக்கதாய் அனைத்துக்கும் தாய்-கலைமகளுக்கும் திருமகளுக்கும் தாய்-சிறப்புடைய ஈசனுக்கும் சிருஷ்டி கிரமத்தால் தாய்'' என்று விளக்கினார் ஹயக்ரீவர். ''ஆசிரியப் பெருமானே! மன்னிக்க வேண்டும். இறைவனுக்கு அம்பிகை மனைவி என்றீர், இப்போது தாய் என்கிறீர்கள். அதனை விளக்க வேண்டும்'' என்றார். அனைத் தும் அறிந்த அகத்தியர் அங்ஙனம் வினவியது நம்போன்றோர் பிற்காலத்தில் தெளிவு பெற வேயன்றோ?

அப்போது ஓர் அசரீரி எழுந்தது. ''அகத்தி யரே, தாராபீடம், வாரும்'' என்றது. அகத்தியர் ஹயக்ரீவர் உடன் வர வங்க-பீகார் மாநில எல் லைப் பகுதியில் இருக்கும் சக்திபீடமான தாரா பீடம் விரைந்தார். அங்குச் சிவபெருமானைச் சிறு குழந்தையாக மடியில் கிடத்தியபடி அன்னை காட்சிதந்தாள். உடனே அகத்தியர் ஸ்ரீமாதா என்ற நாமத்தின் பொருளைத் தெளிவாக உணர்ந் தார். அகத்தியர் தெளிவு பெற அவளே அவர் தமக்கு அன்னையும் ஆனாள்.

4. கர்நாடக மாநிலத்தில் தாருகன் என்னும் அரக்கன் வாழ்ந்து வந்தான். காளியின் வடிவந் தாங்கி தாருகனை வதைத்தாள் அன்னை. பிறகு அந்த உக்கிரம் தணியாது பிறஉயிர்களுக்கும் துன் பம் கொடுத்தாள் காளி. அவ்வுக்கிரத்தினைத் தணிக்கச் சிவபெருமான் அவள்முன் சிறு குழந்தை யாய்க் கிடந்தார். அழகு கொஞ்சும் அக்குழந்தை குப் பால்கொடுக்க எண்ணிய உக்கிரகாளி குழந்தை யினைத் தூக்கினாள். அப்போது குழந்தையாக வந்த இறைவன், பாலினைப் பருகுவது போல் காளியின் உக்கிரத்தை உட்கிரகித்துவிட்டார். பாலகனாக வந்து உலகினைக் காத்த அவரே க்ஷேத்ரபாலகர் எனப்பட்டார். அப்போது அன்னை அவர்தமக்கு அன்னையும் ஆனாள்.

# உழவாரப் பணிபுரிதல் உவப்பு



**பி. ஸ்ரீனிவாசன்**

நான் நேற்று காலையில் சுவாமிமலைசென்று சுவாமிநாதரை அபிஷேக அலங்காரத்துடன் தரிசிக்கும் பாக்கியமும், தங்ககவசம் வைர வேலும் சாத்திய நிலையில் கண்டு மகிழும் பாக்கியமும் பெற்றேன். திருமுருகன் சன்னிதியில் தங்கள் ''திருக்கோயில்'' இதழ் ஒன்றை வாங்கி, அதனை வீட்டிற்கு கொண்டு வந்து, அனைவரும் படித்து மகிழ்ந்தோம். மாதந்தோறும் ஒரு இதழ் வாங்குவது என்ற முடிவிற்கு வந்துள்ளேன். என்னைப்பற்றி சில தன்னிலை விளக்கங்களை கூற விரும்புகிறேன்.

நான் தபால் தந்தி இலாக்காவில், தந்தி பயின்ற சப்போஸ்ட் மாஸ்டராக சுமார் 36 ஆண்டுகளாக பல ஊர்களில் மிகவும் சிறப்பான பெயருடன் பணிபுரிந்து வந்திருக்கிறேன். நான் தற்சமயம் கும்பகோணம் நகரில், பாணாதுறை தபால் அலுவலகம் என்ற நகரத் துணை தபால் அலுவலக போஸ்ட் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு திருமணம்நடைபெற்றபோது எனக்குத்தெய்வபக்தி என்பது கிடையாது. அதற்கு பிறகு சில ஆண்டுகள் கழித்து என் மனைவி தங்ளது பெற்றோருடன் பழனி சென்று முருகனைத் தரிசித்து வந்து அளித்த பிரசாதத்தை மனைவியின் முகத்தில் திருப்பி வீசியவன் நான். அத்தகைய நாத்திகவாதியான நான், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள மணல்மேடு சப்போஸ்டு மாஸ்டராக பணிபுரிந்து வரும்போது எதிர்பாராத வாழ்க்கை சிக்கல்களின் விளைவாக, முதல் முதலாக கோவிலுக்கு போகும் எண்ணம் ஏற்பட்டு அதன் விளைவாக மாதா மாதம் சுவாமிமலை சென்று சுவாமி நாதனை வழிபடும் பழக்கத்திற்கு உள்ளானேன். நான் குடந்தை மாற்றப்பட்ட பிறகுதான் என்பக்தி கொஞ்சம், கொஞ்சமாக வளர்ந்து முதலில் இராமசாமி கோவில், பிறகு சக்ரபாணி திருக்கோயில், சாரங்கபாணி திருக்கோவில், என மேலும் வளர்ந்து பிறகு கும்பேஸ்வரர், நாகேஸ்வரர், சோமேஸ்வரர், விஸ்வேஸ்வரர், அபிமுகேசர், பாணுபுரிஸ்வரர் என மேன்மேலும் வளர்ந்து இன்று எம்பிரான்களை காணாதநாள் என்ன நாளோ, கண் என்ன கண்ணோ என்ற நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது.

இத்துடன் ஒவ்வொரு ஞாயிறுதோறும் குடந்தையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் உள்ள பட்டீஸ்வரர் அருள்மிகு துர்காதேவி, வலங்கமான் சீதாளதேவி அம்மன், மகாமாரியம்மன், திருவிடைமருதூர்வாழ் பிரகத்சுந்தர குசாம்பிகை சமேத அருள்மிகு மகாலிங்கேஸ்வரர், திருபுவனம் கோவில் கொண்டுள்ள அருள்மிகு தர்மசம்வர்த்தினி சமேத கம்பகரேஸ்வரர் மற்றும் சரபேசர், திருநாகேஸ்வரம் உறை அருள்மிகு பிறை அணி அம்பாள், கிரிகுஜாம்பிகை சமேத நாகநாதர், நாகம்மை சமேத நாகராஜா (இராகுபகவான்), என்னப்பர் மணியப்பர் சமேத உப்பிலியப்பர் ஆகியோர்களுடைய திருக்கோவில்களையும் சுவாமிமலை திருவலஞ்சுழி கோவில்களையும், நடந்தே சுற்றி வழிபட்டு வந்தேன். சுமார் இரண்டாண்டுகள். (இந்த ஊர்கள் எல்லாம் குடந்தையிலிருந்து சுமார் 5 முதல் பத்து கிலோ மீட்டர் தூரம் உள்ளவை)

அப்படி நடந்து வழிபட்டு வரும்போது மூன்று ஆண்டுகளுக்குமுன், சுவாமிமலைக்கு வெகுஅருகில் திருக்கோவில் கொண்டுள்ள திருவலஞ்சுழிநாதர் எனப்படும் திரு பெரிய நாயகி சமேத கபர்தீஸ்வரர் வலஞ்சுழிவிநாயகர், கடல்நுரையால் ஆன வெள்ளை விநாயகர் ஆகியோரை கொண்ட திருவலஞ்சுழி திருக்கோவில், (திருவானைக்கோவில் தஞ்சை பெரிய கோவில்களுக்கு பிறகு அதிகமான லிங்கங்களை 38 லிங்கங்களைத் தன் இரு பக்கங்களிலும் கொண்ட கபர்தீஸ்வரை தரிசிக்கும்போது, அவரைச் சுற்றியுள்ள வெளிப்பிரகாரம்

மிகவும் அழகாகவும், பெரியதாகவும் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டு, கல்வெட்டுகளுடன் கூடிய தாக இருந்தபோதிலும் பிரகாரத்தின் தரைப்பகுதி கள் சிதைவு அடைந்து மிகவும் உயரமான செடி களும் கொடிகளும் புற்களும் முளைத்து, மூன்று பக்கமும் பிரகாரங்களை வலம் வரும் பக்தர்கள் சுற்றிவர இயலாத வண்ணம் இருப்பதை பார்த் தேன். நான் ஒவ்வொரு திருக்கோவிலிலும் வெளிப் பிரகாரம் முதல் எல்லா பிரகாரங்களையும் மூன்று முறை வலம்வந்து சுவாமியைத்தரிசிக்கும் பழக்கத் கத்தைக் கடைபிடித்து வருகிறேன். எனவே திரு வலஞ்சுழி பெரிய பிரகார நிலையைக் கண்டு மறு முறை வரும்போது, வெளிபிரகாரத்தின் மூன்று பக்கங்களையும், புற்பூண்டுகள் செடிகள் இல்லாமல் சுத்தம் செய்வது என்று தீர்மானித்து அதற்கான கருவிகளை விலைக்கு வாங்கி, இரண்டு நாட்கள் அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு சுத்தம் செய் யும் பணியினை ஆரம்பித்தேன். நான் திருவலஞ் சுழியில் ஆரம்பித்த பிரகார சுத்தம் செய்யும்பணி இரண்டு நாள் லீவில் முடியவில்லை. எனவே மேற் கொண்டு 2 நாட்கள் லீவு அதிகமாக எடுத்து மூன்று பக்கத்துப் பிரகாரங்களையும் செடிகள், கொடிகள் புற்களை அழித்து சுத்தப்படுத்திவிட்டேன். அப் போது, தேள், பூரான், பாம்பு சட்டை, பாம்பு குட்டிகள் முதலியன இடைபட்டன. நானும் பயப் படவில்லை. அவைகளும் என்னை ஒன்றும் செய்ய வில்லை. பிரகாரம் சுத்தமான மகிழ்ச்சியில் கபர் தீஸ்வரை வணங்கி குடந்தை திரும்பினேன். பயன் அன்று இரவே பெருமழை பெய்துவிட்டது. அடுத்த மாதம் ஒரு ஞாயிறு அன்று போய் பார்த்தேன். எவ்வளவு காலமாக வேரோடிய செடி, கொடி களோ, மீண்டும் செடிகளும், கொடிகளும் வளர்ந்து வருவதைக் கண்டேன். எனவே 1985ம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த உழவாரப்பணி, இன்றும் தொடர்கிறது. கடந்த மூன்று ஆண்டு காலமாக, ஞாயிறுதோறும், காலை 4 மணிக்கே எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு 6 மணிக்குள் கிடைக்கும் பஸ் ஏறி, கோவில் திறக்கும் நேரமாகிய 6 மணிக்கே அநேகமாக கோவிலை அடைந்தால்கோவில் சாத்தப்படும் நேரமாகிய 11.30 வரைபிரகார வேலை. மதியம் வேலை முடியாவிட்டால் நடுப்பகலில் சுவாமிமலை சென்று ஓய்வும் சுவாமிநாதர் தரிசனமும். மீண்டும் 4 மணிக்கு வலஞ்சுழி வந்து உழவாரப்பணி தொடர்ந்து இருட்டும்வரை அதாவது மாலை 6.30 முதல் 6.45 வரை செய்வேன். பிறகு பஸ்பிடித்து குடந்தை திரும்புவேன். வேலை முடியாவிட்டால் ஞாயிறு என்று வரும் என்று காத்திருந்து மீண்டும் மீண்டும் அதே பணி. மூன்று ஆண்டுகளாக தொடரும் இந்த பணியில் 18.5.88 (ரம்சான் லீவ்) அன்று கிடைத்த லீவினை பயன்படுத்த எண்ணி அதிகாலையிலேயே திருவலஞ்சுழி சென்று பணியினை செய்து இடையில் சுவாமிமலையில் தங்கி மீண்டும் 4 மணிக்கு வந்து 6.30 வரை பணியினை செய்தும், பணிமுடியாததால் அடுத்த ஞாயிற்றுக்கிழமையை எதிர்நோக்கி இல்லம் திரும்பினேன.

திருவலஞ்சுழிநாதர் என்னை, தன்கோவில் பணியுடன் நிறுத்தவில்லை. ஞாயிற்று கிழமைகளி லும், விடுமுறை தினங்களிலும், மற்றும் லீவு போட்டுச் செய்தும் என்னை காலை 4 மணிக்கே எழுப்பிப் பிற திருக்கோவில்களுக்கும் அனுப்பி இந்த உழவாரப்பணியினை தொடர்ந்து நிறுத்தாமல் செய்யவைத்துள்ளார். அவைகளில் சில.

1) குடந்தை சோமேஸ்வரர் திருக்கோவில்
2) ,, இராமசாமி திருக்கோவில்(பெரிய கடை வீதியில் உள்ளது)
3) ,, இராஜகோபாலசுவாமி திருக்கோவில்
4) ,, நாகேஸ்வரர் திருக்கோவில் (வெளிப் பிரகாரம்)
5) குடந்தை கும்பேஸ்வரர் திருக்கோவில் (வெளிப் பிரகாரம்).
6) பட்டீஸ்வரம் தேனுபுரிஸ்வரர் திருக்கோவில் (உட்பிரகாரப்
7) ஞானம்பிகை திருக்கோவில் (உட்பிரகார
8) திருச்சக்திமுற்றம் சக்திவனேஸ்வரர் கோ (வெளிப் பிரகார

மற்றும் சில திருக்கோவில்கள், நாகேஸ்வர கோவில் கும்பாபிஷேகம் காஞ்சி புதுப்பெ யவர் தலைமையில் சமீபத்தில் நடந்தேறிஉள்ள

சென்ற 15.5.88 ஞாயிறு அன்று பட்டீஸ்வரம் அருகில் உள்ள திருச்சக்தி முற்றம் கோவிலுக்கு செல்ல 6 மணி பஸ்பிடித்து 6.30 மணிக்கு கோவிலை அடைந்து பணியினைத் தொடர்ந்தேன். கோடையின் கடுமை காலையிலேயே தெரிந்தது வெளி பிரகாரத்தின் தெற்கு சுவர் ஓரமாக சுத்த செய்து வரும்போது 7.30 மணிக்கு ஒரு பெரிய தேள்கொட்டி விட்டு மதிற்சுவர் மேல் ஏறிக்கொண் டிருந்தது. எனக்கு எப்பொழுது தேள் கொட்டி னாலும் என்ன வைத்தியம் செய்தாலும் அடுத் நாள் வரை வலியால் கஷ்டப்படுவேன். ஆனா இந்தப் பணியின் ஆரம்ப நிலையில் தேள் கொட் டிய உடன் ''முருகா'' என்று மனதில் நினைத் சக்திவனேஸ்வரரையும் எண்ணி வருந்தாம சிரித்துக்கொண்டேன். ஏன்எனில் இந்தப் பிரகாரப் பணியினை 11 மணி அளவில் முடித்துக்கொண் 11 மணி அளவில் பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வர ஞானம்பிகை ஆலய உட்பிரகாரங்களில் உள்ள சிறு புற்களை 12 மணிக்குள் சுத்தம் செய்துவிட் பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டு நடந்து சென் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவ சுழி கோவில் பணியினை 4 மணிக்கு தொட வேண்டும் என எண்ணியிருந்தேன். என இறைவன் செயலை எண்ணிசிரித்தேன். பணியி தொடர்வதா அல்லது தேள் கொட்டிய வலியு குடந்தை திரும்புவதா! என்ன ஆச்சரி எறும்பு கடித்தது போன்ற இலேசான அவ்வளவுதான். நல்லவெயில், பணியின தொடர்ந்து 11.30க்கு முடித்துக்கொ 11.35க்கு துர்காதேவியின் கோவிலை நெ னேன். அந்த சிறிய வலியும் போய்விட எனவே மாலை 6.30 மணிவரை திரு சுழியில் பணியினைச்செய்து சுவாமிமலை முருகனை தங்கத்தேர் சகிதம் கண்டு இரவு 8 மணிக்கு வீடு திரும்பினேன்.

எனவே கடந்த மூன்று ஆண்டுகளுக்கு னம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பணி தொடர் மழை வெயில் எதனையும் பொருட்படுத் மனைவிமக்கள், ''உடல் வீணாகிவிட்டதே'' கூறித் தடுக்கும் எதிர்ப்புகளுக்கிடையேயு உயிர் உள்ளவரை தொடர உறுதிக்கொண் ளேன். எனக்கோ வயது 55 முடிந்து விட் உறுதி உள்ள அளவிற்கு உடலில் உறுதி இறைவன் கொடுத்த உடல் இறைபணி முடியட்டும் எ[illegible] தொட[illegible]றேன். இ[illegible] தத்தை தங்க[illegible]தழில் ப[illegible] கொள்கிறேன். யாராவது ஒரு சிலராவது யினைத் தொடரும் மனதிடம் ஏற்பட்டு முன் வந்தால் மிக்க மகிழ்ச்சி. மக்களின இல்லாமல் இல்லை. ஆனால் உடலையான இறைதொண்டு செய்ய எவ்வளவு பேர் எனை ஆதரிக்காவிட்டால், குறை இருந்தால் போதும்.

னது வல் ரம் பிலி ணித் ன்ன வண்டு ன்னை நபோது மழங்கி நு ஆறு நகமே! இடி என் ராட்டி என்று வேண் ட்டார். அழைத்த திருமால் இடும் என் சுரிக்கும்படி மழை வண் மழை நிற மழை பொழி ஷம் உலகை மழை கரிடமிருந்து நீராடமழை வண்டும் என்று

மேகத்தையே கண்ணனாகக் கண்டு வேண்டுகின்றனர் ஆயர்பாடியிலுள்ள சிறுமிகள்.

''ஆழி மழைக்கண்ணா, ஒன்றும் நீ கைகரவேல்!
ஆழியுட் புக்கு முகந்து கொடார்த்து ஏறி
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

## 5. பாவங்களை போக்கும் பரமமூர்த்தி

நாராயணனாக நின்ற பெருமான், பாற்கடலில் பையத்துயின்ற பரமனாகக் காட்சிதந்து, ஓங்கி உலகளந்த உத்தமனாகத் திடீரென வளர்நது தன் மாய சக்தியைக் காட்டியவனானபடியால் மாயனை என்றாள். வடமதுரை வெகு காலமாகக் கண்ணனது வாசத்தலமாக இருந்தது. சிறிது காலம் சத்ருக்னன் தலை நகரமாகக் கொண்டிருநததால் புகழ்பெற்றது என்பதை மன்னுவடமதுரை மைந்தனை என்றார். இறைவன் திருவடி பட்டுத் தூய்மையாயிற்று யமுனை, ஆழமாகத் தெளிவாக இருப்பதால் தூயது, சீதையை இராவணன் எடுததுச் சென்றபோது கோதாவரி நதியை நோக்கிச சதாபிராட்டி கதறியும் கோதாவரி உதவவில்லை. இராமபிரான் எத்தனையோ வணங்கி வேண்டியும் வருணனான கடலரசன் வரவில்லை. ஆனால் யமுனையோ வசுதேவர் நள்ளிரவில் பிறந்த குழந்தையான கண்ணனைக் கோகுலத்திற்கு எடுத்துச சென்றபோது வழிவிட்டது. எனவே கண்ணனுக்கே சேவை செய்து தூயதாயிற்று. ஐந்து லட்சம் கோபியர் ஒன்றாக நீராடத் துறைகளுடையதாக இருந்தமையாயால் தூய பெருநீர்யமுனைத் துறைவனை என்றார். அரசர் குலத்தில் பிறந்தும் ஒரே இரவில் ஆயர்பாடியில் யசோதையின் மகனாகித் தோன்றினான். புகுந்த இடத்தில் தன் புகழைப்பரப்பி அக்குலத்திற்குப் பெருமை தருமாறு பிரகாசமாக விளங்கியமையால், ஆயர் குலத்தில் தோன்றும் அணி விளக்கை என்றார். வளர்ப்புத் தாயான யசோதை கண்ணன் மண்ணைத் தின்றான் என்று வாயைத் திறக்கச் சொன்னபோது தன் வாய் திறந்து தன் வயிற்றில் உலகம் பூராவுமிருப்பதைக் காட்டித் தன் குடலை விளக்கிக்காட்டினான். யசோதை வெண்ணைதிருடிய கண்ணனை அவன் வயிற்றில் தழும்பேறுமாறு கயிறு கொண்டு கட்டியமையால் வயிற்றில் தழும்புடைய தாமோதரன். எனவே தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன் எனக்குறித்தார். இத்தகைய பெருமையுள்ள கண்ணனிருப்பிடத்திற்குத் தூய்மையுடன் வர வேண்டுமாம். மனத்தில் தூய்மையுடன் (தவறான எண்ணங்கள் இல்லாது) வாக்கில் தூய்மையுடன் (தீய சொற்களைப் பேசாது) காயத்தால் தூய்மையுடன் நீராடி வந்து அவன் புகழ்பாடி, மனத்தில் சிந்தித்து தூயமலர்களைத் தூவித்தொழுது வணங்கினால் நமது முன் பிறவிப் பாவங்கள் தீயினில் பட்ட தூசாக அழியும். இனியும் பாவங்கள் அணுகா. எனவே நாமங்களைக் கூறி (செப்புக) உய்க'' என்றாள்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர்யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்

## 6. உள்ளத்தைக் குளிர்விக்கும் உத்தமன் நாமம்.

இறைவன் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் கூட வியக்கத்தக்க சில ஆற்றல்களை அளித்துள்ளான். விலங்குகள் தமது உணவை முகர்ந்து பார்த்து அவை தக்கவையல்ல என்றால் தள்ளிவிடும். காலை வேளையில் மப்பின் காரணமாக சூரியன் தோன்றாது இருண்டிருந்தாலும் பறவைகள் சரியான நேரத்தில் எழுந்து கூவி ஒலி எழுப்புகின்றன.

இந்தப் பாடலில் இறைவனை எண்ணித் தன் நினைவிழந்து கிடக்கும் ஒரு பெண்ணை எழுப்புகிறாள். ''அம்மணி! பறவைகள் கூவத் தொடங்கிவிட்டன. பொழுது விடிந்துவிட்டது. புள்ளும் சிலம்பின காண் என்கின்றனர். ஆண்டாள் தனது நாச்சியார் திருமொழியிலேயே ''காலையில் பறவைகள் எழுந்து இறைவனை எண்ணிப்பாடுதலை

''காலை எழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மை கொலோ'' என்றார். படுத்திருப்பவள் எழாமலே ''அவை கூவியிருக்காது''. நீங்கள் போட்ட சத்தத்தில் எழுந்துவிட்டன போலும்'' என்கிறாள்.

இராமபிரானின் அயோத்தியில், திருவரங்கத்தில் இன்று எழுந்தருளியுள்ள திருவரங்கப்பெருமானை வைத்துப் பூசித்துக் கொண்டிருந்தாகக் கூறி, அப்பெருமானுக்கு இட்சுவாகு குலதனம் என்று பெயரையே இட்டனர். அதுபோல கண்ணனிருந்த கோகுலததிலும் கருடவாகனான நாராயண மூர்த்தியின் திருககோவில் இருந்ததுபோலும். புள்ளரையன் கோயில் எனக் குறித்தார். அந்தக் கோயிலிலிருந்து சங்குகளை ஊதுகின்றனர். அந்தச் சங்கின் வெண்மைநிறம் தெளிவாக தெரிவதால் பொழுது விடிந்துவிட்டது எனப் புரிந்து கொள்ளலாமே. ''வெள்ளை சங்கின் பேரரவம்கேட்டிலையோ?'' என்கிறார்கள்.

''பூதகி என்பவளை அவளிடம் பாலுண்பது போல் பாசாங்கு செய்து கொன்றான். வண்டியுருவில் வந்த சகடாசுரனைக் கொன்றான்'' எனக் கண்ணனுக்கு வந்த ஆபத்துக்களைப் பேசி ''அப்படியா! எம்பெருமானுக்கு அவ்வளவு ஆபத்துக்களா நேர்ந்தன'' என திடுக்கிட்டு எழுவாள் எனக் கூறினர். தூங்கிய பெண் எழுந்திருக்கவே இல்லை. இத்தகைய அபாயங்களிலிருந்து மீண்டும், திருமால் தனது பாம்பணையில் தூங்குகின்றானாம். விதை, நீரில் கிடந்து, தானேமுளைக்கும். பத்து அவதாரங்களுக்கும் விதையான பரமன் அரக்கரை அழித்த களைப்பு நீங்க உறங்குகிறான் போலும் என ஆறுதலடைகின்றனர். ''வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை'' என அக்கோலத்தைக் குறித்தார்.

யோகிகள் இறைவனை மனத்தால் தியானிப்பர். முனிவர்கள் பாரத்வாஜர் முதலானவர் போன்று சேவையும் செய்யக் கூடியவர்கள். குழந்தைக்குத் துன்பம் ஏற்பட்டுவிடக்கூடாது எனக் கருப்பவதியான பெண் தன்வயிற்றைப் பிடித்துக் கொள்வது போல நெஞ்சைத் தீண்டிக்கொண்டு மெதுவாக எழுந்து ''ஹரி'' என இறைவன் நாமம் கூறுகின்றனர்.

பிரகலாதனை மலைப்பாறையில் கட்டி இரணியன் கடலில் உருட்டியபோது தன் நெஞ்சிலுள்ள நாராயணனுக்கு ஏதோ தீங்கு நேருமோ என எண்ணித் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டானாம் பிரகலாதன்.

முனிவர்களும் யோகிகளும் கூறிய ஹரிநாமம் கேட்டு உள்ளம் குளிர்ந்து உன்னை எழுப்ப வந்தோம் என்கின்றார்கள் கோபிகள். பிரகலாதனை இரணியன் நெருப்பிலிடும்போது, அக்குழந்தை ஹரி என்று கூற, சுட வேண்டிய நெருப்பும் குளிர்ந்ததாம். ''குளிர்ந்தது சுடுதீயே'' என்பது கம்பர் வாக்கு. வெப்பமானவற்றையும் குளிர்விக்கும் ஹரி நாமம் கேட்டு உன்னை எழுப்ப வந்தோம் என்கின்றனர்.

இந்த ஆறாவது பாசுரத்திலிருந்து பதினைந்தாவது பாசுரம் வரை ஒவ்வொரு ஆழ்வாரையும் எழுப்புவதாகச் சில உரையாசிரியர்கள் சாதிக்கின்றனர். பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்றபடி எப்போதும் இறைவனை தியானிக்கும் ஆழ்வார்கள் தூங்கினார்கள், எழுப்பப்பட்டார்கள் என்பது சரியில்லை. எப்போதும் சாக்கிரதையுடன் விழித்துத் தியானத்திலிருப்பவருக்கும் உறக்கம் எப்படி வரும் என்பது சில மகான்களின் கேள்வி. இந்த சர்ச்சையை வாசகர்களின் முடிவிற்கே விட்டு விடுகிறோம். தமிழ்மொழி எவ்வளவு விதமானாலும் பொருள் காண்பதற்கு இடமளிக்கின்றது. அந்த இன்பத்தை அன்பர்களும் நுகரவேண்டும் என்ற கருத்தில் ஆழ்வார்களைப் பற்றிய குறிப்புக்களையும் சமர்ப்பிக்கிறோம். புள்ளும் சிலம்பின பாசுரம் பெரியாழ்வாரை எழுப்புவதாகப் பொருள் கண்டுள்ளனர் சில பெரியோர்கள்.

கண்ணனைத் தெய்வமென அறியாமல் பல்லாண்டு பாடி வாழ்த்தியதால் பிள்ளாய் - அறியாதவரே என அழைத்தனர். நந்தவனம் வைத்துப் பல பறவைகளின் குரல்களை அனுபவித்தவராதலால் புள்ளுஞ்சிலம்பின என்றனர். புள்ளரசனான கருடனின் அம்சமாகப் பிறந்தவரென்பதால் புள்ளரையன் என்றெல்லாம் சொற்களை உபயோகித்துப் பெரியாழ்வாரைக் குறித்தனர் என்பர்.

புள்ளுஞ்சிலம்பின காண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

## 7. நாமம் கேட்டும் எழவேண்டாமா?

புட்கள் சிலம்பின, இன்னும் கொஞ்ச நேரம் கழிந்த பொழுது மேலும் விடிய ஆனைச்சாத்தம் (செம்போத்து எனக் கேரளத்தில் அழைப்பர்) என்ற வலியன் என்ற பட்சிகள் சத்தமிடலாயின. கீசு கீசு எனப் பேசினும் பட்சிகளின் மொழியில் ஏதோ பொருள் கொண்டுதானே பேசும்! பட்சிகளுக்கு மொழிகள் உண்டு. அவைகளை கைகேயியின் தந்தையான கேகயராசன் அறிவான் என ராமாயணம் கூறும். வலியான் என்ற பறவைகளின் ஒலி கேட்டும் எழாத நீ சத்துவகுணமற்ற பேய்ப் பெண்ணாகிவிட்டாயா?

ஆபரணங்களை இருவகையாகக் கூறினர். பிறந்தது முதல் அணியும் வளை முதலானவற்றை பிறப்பும் என்றும், தாலி முதலானவற்றைக் காசு என்றும் கூறினர். தயிர் கடையும் மத்தின் ஓசை கடையும் பெண்களின் கைவளை ஓசை இவைகள் [illegible] அப்பெண்ணை எழுப்பவில்லை. காதுகேட்க [illegible] போலும்! பெண்கள் தயிர்கடையும் போது [illegible] அவிழ்ந்து பரிமளவாசனை வீசும். அதுவும் [illegible] தூக்கத்தைக் கலைக்க முடியவில்லை போலும்.

[illegible] தலைவி போன்ற நீ தூங்கலாமா [illegible] பெண் பிள்ளாய்! ஆயர் பெண்களுக்கு எப்பொழுதுமே கண்ணனின் நினைவுதான். தயிர் விற்கும்போதுகூட ''கோவிந்தன் வாங்கலையா? தாமோதரன் வாங்கலையா? எனத் தடுமாறித் தயிருக்குப் பதிலாக இறைவன் பெயர் சொல்லக் கூடியவர் என்பர் கிருஷ்ணகர்ணாமிர்தம் ஆசிரியர். அப்பேர்ப்பட்ட ஆயர் குலப்பெண், இறைவன் நாமம் கூறியும் பேசாமல் கிடக்கிறாளே என வியக்கின்றனர். பரமபதத்தில் இருந்து, நம்மிடம் வாராமலே காக்கும் நாராயணன், கிணற்றில் விழுந்த குழந்தையைச் காப்பதற்குத் தாய் கிணற்றுக்குள் குதிப்பது போல நமக்காகப் பரமபதத்திலிருந்து இறங்கி வந்த மூர்த்தி, அழகிய கேசமுடையவனாகவும், கேசி எனும் அரக்கனைக் கொன்றவனுமான கேசவன் என்று அவன் நாமங்களைப் பாடுகிறோம். இறைவன் நாமம் பாடினால் ஒளியும், பலமும், அழகும், நற்குடிப்பிறப்பும் கிடைக்குமென்பர். நீ ஏற்கனவே இறைவனை வணங்கி வாழ்த்தியதால்ஒளியுடையவள். ''தேசமுடையாய்'' இத்தகைய ஒளியைக் காட்டிப் பிறருக்கும் தெய்வீக ஒளி உண்டாக்கவேணும். ஒரு விளக்கு மற்றொரு விளக்கை ஒளி பெறச் செய்யுமாப்போல' என்கின்றார். எழுந்துவந்து கதவைத்திற என அழைக்கின்றனர்.


இப்பாடல் குலசேகராழ்வாரைக் குறிக்கின்றது என்பர். ''பேயரே எனக்கு யாவரும்; யானுமோர்பேயனே'' என இவர் தன்னையழைத்துக் கொண்டதால் பேய்ப் பெண்ணே என்கின்றார். இராமபிரானுக்குத் தாலாட்டுப் பாடியமையால் பெண்பிள்ளாய் என்றனர். கொல்லிநாயகன், கூடல் நாயகன் என அழைக்கப்பட்ட அரசகுலத்தவரான இவரை நாயகப் பெண்பிள்ளாய் எனக் குறித்தனர். பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கை மன்னன் ஆகிய பதினொரு பேர்களுக்கு நடுவில் இவர் பெயர் வந்ததால் நாயகப் பெண்பிள்ளாய் என அழைத்தனர் என்பர். திருவேங்கடமலையில் மீனாய்ப் பிறப்பேன், படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே என்றெல்லாம் இறைவனையே எண்ணி ஏங்கி உருகிப் பாடியமையால் ஒரு ஒளி பெற்றார். எனவே தேசுமுடையாய் என்றார். எப்போதும் இராமாயணத்தில் ஈடுபட்டுக் கேட்டுக் கிடந்தமையால் கேட்டே கிடத்தியோ? என்றார். தெய்வ சிந்தனையின் காரணமாக அரசாங்க வேலைகளைக் கூடச் சரியாகக் கவனிக்காததால் மனம் வருந்திய மந்திரிகள் பூஜையறையிலிருந்த ஒரு ரத்தினமாலையை மறைத்துவிட்டு 'வைணவர்கள்தான் எடுத்தனர்'' எனக்கூற, குலசேகரப் பெருமான், குடத்தில் பாம்பைவிட்டு ''திருமாலடியார் திருடமாட்டார்கள். அப்படித் திருடி இருந்தால் என்னைப் பாம்பு கடிக்கட்டும்'' எனக் கைவிட, உள்ளிருந்த நாகப்பாம்பு ஆழ்வாரின் கையில் நாகரத்தினத்தைக் கக்கியது என்பது வரலாறு. அதனால்தான் இவரை எழுப்புகின்றதாகக் கூறப்பெறும் இப்பாசுரத்தில் காசும் பிறப்பும் என்று நகைகளின் பெயரும் வந்தன என்கின்றார்கள்.


இறைவன் நாமம் பாடி நாமும் ஒளியும் அழகும் மற்று எல்லா நலன்களும் பெறுவோமாக!

கீசு கீசென்று ஆனைச் சாத்தம் கலந்து
பேசினபேச்சரவம்கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாசநறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய், திறவேலோர் எம்பாவாய்!

—(தொடர்ந்து வரும்)


மகிஷாசுரமர்த்தினி
கதை: வடிவம்: நிறைமதி
படம்: M.N.ராஜா
இரம்பன், கரம்பன் எனும் இரு அசுர சகோதரர்கள் நெருப்பிலும், நீரிலுமாகத் தவம் புரிந்தார்கள். இவர்கள் தவத்தைக் கண்டு அஞ்சிய இந்திரன் முதலையாக வந்து கரம்பனை விழுங்கிவிட்டான்.
ஆ...! அண்ணா!
"தம்பி! உனைக் கொன்ற இந்திரனை நான் பழிவாங்குவேன்!" என்று சூளுரைத்த இரம்பன் நெருப்பில் நின்று மீண்டும் உக்கிரமாகத் தவம் புரிந்து தன் தலையை அறுத்துக் கொள்ள, அக்கினி தோன்றினான்.
என்ன வரம் வேண்டும்?
இந்திரனை வெல்லும் மகன் வேண்டும்!
அப்படியே பெறுவாய்!
ஊர் திரும்பும் வழியில் ரம்பன், எருமை வடிவம் கொண்டு ஓர் எருமையை மணந்தான். ரம்பன் மணந்த பெண் எருமையின் வயிற்றில் எருமை வடிவத்தில் பிறந்தவன் தான் மகிஷன்
'அடேய் இந்திரா! நீயாக அமராபுரியை விட்டு ஓடுகிறாயா? இல்லை உன்னை ஓட வைக்கட்டுமா?
தேவ படைகளுடன் அசுரப் படைகள் போர் செய்ய மகிஷன் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான்
எனக்கு மரணமே கூடாது
அப்படி வரம் தர இயலாது!
பெண்ணால் அன்றி; வேறு யாராலும் எனக்கு மரணம் வேண்டாம்!
சரி! வரம் தந்தோம்
மும்மூர்த்திகளே! மகிஷன் அமராபதி ஆன நாங்கள் மலைக் குகைகளில் ஒளிந்து கிடக்கிறோம். குறை தீர்த்தருள வேண்டும்!


மகிஷனைச் சம்ஹரிக்க ஆதிபராசக்தியால்தான் முடியும். அன்னையை நாம் பிரார்த்திப்போம்!
மும்மூர்த்திகளும், தேவர்களும் பிரார்த்திக்க ஆதிபராசக்தி தோன்றினார். அஷ்ட தசா புஜங்களுடன் தோன்றிய அன்னை சிம்மவாகனத்தில் ஆரோகணித்து மகிஷனை வதைக்க எழுந்தருளினார்
அன்னை விட்ட பெருமூச்சிலிருந்து தோன்றிய தேவி கணங்கள் மகிஷனின் படைகளைச் சம்ஹரிக்க ஆதிபராசக்தி மகிஷனின் பிடரியில் தன் பாதத்தை வைத்துத் திரிசூலத்தால் அழுத்தினார்.
மகிஷனின் ஆணவம் அப்பொழுதும் அடங்காமல் போகவே, ஒரே வீச்சில் ஆதி பராசக்தி தம் வாளைப் பிரயோகித்து மகிஷனை வதைத்துவிட்டார்.
மாளய அமாவசைக்கு முன் தினம் தோன்றிய ஆதி பராசக்தி அஷ்டமி-நவமி கூடும் வேளையில் மகிஷ வதம் செய்து முடித்தார். அன்னையின் வெற்றியை மூவரும், தேவரும், யாவரும் கொண்டாடி மகிழ்வதே விஜயதசமி திருநாள் ஆகும்.



# வல்லக்கோட்டையில் நான்கண்ட முருகன்!

எம். வி. அரங்கநாதன்

ஓங்கி உலகளந்த உத்தமனின் மருமகனும்-எந்நாட்டவர்க்கும் இறைவனுமாகிய தென்னாடுடைய சிவனின் திருக்குமாரனும் முத்தமிழ் முழங்கும் செந்தமிழ் நாட்டின் குலதெய்வமுமான முருகன் ஏழடி உயர உருவத்தில் நின்று அருள் பாலிக்கும் திருக்கோலத்தை வல்லக்கோட்டையில் கண்டவர் அனைவரும் அவன் பாதம் சரண் அடைவது திண்ணம். அவ்வாறே யானும் அவனிடம் சரண் அடைந்து அவன் அருளை பெறத் தவம் கிடந்து வருகின்றேன். அவன் இட்ட பணியைச் செவ்வனே நிறைவேற்றிட தினம் தினம் அவன் தாள் பணிந்து வணங்கி அப்பணியை தொடர்கின்றேன். அப்பணியில் பல சிரமங்கள் தொய்வுகள் ஏற்பட்டபோதும் அச்சமயங்களில் அவன் துணை நாடி அவனது ஆசி பெற்று, மனத்தளர்வும் சோர்வும் நீங்கப்பெற்று பணியாற்றி வருகின்றேன்.

வல்லக்கோட்டையான் பாதத்தைப் பணிந்தால் நமக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை உளமார உணர்ந்தவர்கள் பலரும் கூறியவற்றை இங்கே தொகுத்து வழங்குகிறேன்.

''தொல்லை மறையும் துயர் மறையும்
நல்லது பெருகும் நலம் பெருகும்
தொல்லை சூழ் பிணி மறையும்
இல்லை எனும் வறுமை ஒழியும்''

''கல்மனம் கரையும் கவலை மறையும்
அல்லல் கொண்ட மனம் தெளியும்
இல்லையே இனிதொடர் மறுவாழ்வு
வல்லக்கோட்டை யான் பதம்பணிந்தால்''



திருக்கோயிலின் திருக்குளம்

''பொன்னும் வரும் பொருளும் வரும்
பொன்னான மனதில் நிறைவு வரும்
எண்ணும் வரும் எழுத்தும் வரும்
எந் நாளும் மகிழ்வு தானே வரும்''


''அன்பும் வரும் அருளும் வரும்
அன்பையே காட்டும் கண்கள் வரும்
இன்பம்வரும் இளமை வரும்
நன்மையாவும் நாடியேவரும்''.

மேலே கூறியவை முழுக்க முழுக்க உண்மையே. அவனை நினைத்து அவன் பாதம்பற்றி அவன் வாழும் ஆலயத்தில் விளக்கேற்றி வைக்க நினைத்த எந்தனுக்கு வாழ்வில் ஒளியேற்றி வைத்து அருள் பரிபாலித்தவன் அவன். எனவேதான் அக்கோயிலுக்கு வருவோர் ஒவ்வொருவரையும் அவரவர் கையினாலேயே எண்ணெய் கொணர்ந்து அவர்கள் திருக்கரங்களாலேயே திரியிட்டு விளக்கேற்றிநான் பெற்ற இன்பத்தை - நலத்தை அனைவரும் பெற வேண்டுமாய் எடுத்தியம்பி வருகிறேன்.

நான் இத்திருப்பணியை ஏற்ற உடனேசெய்த முதல் வேலை பூஜைகள் நடைபெற-விளக்கேற்றி வைக்க வேண்டிய காரியங்களில் முருகன் அடியார்களுடன் சேர்ந்து ஈடுபடலானேன். விளக்கிற்கு வேண்டிய எண்ணையைச் சென்னையிலிருந்து கொண்டு சென்று விளக்கேற்றி வந்தோம். அச்சமயம் எனக்கு இரண்டு முக்கிய 'பிரச்சினைகள் இருந்தன. ஒன்று எனது உடல்நிலை மற்றது எனது பதவி உயர்வு.

நான் இவ்வாலயத்திற்கு வருவதற்கு முன்பு என் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. பல நாட்களாக அவதியுற்றேன். பல இடங்களில் மருத்துவம் பார்த்தும் தீராதநிலை. உடல் நலமாகவில்லை. இந்நிலையில்தான் வல்லக்கோட்டை முருகனிடம் என் நிலையை எடுத்துக்கூறி உடல் நலம் காண அவன் அருளைக் கோரினேன். உடல் நலம் பெற்றேன். இன்றுவரை அவன் சன்னிதானத்தில் பணி செய்து கொண்டிருக்கிறேன்.

இவ்வாறே எனது பதவி உயர்வுக்காகமுயன்று அது உத்தரவு ஆகியும் அது என் கைக்கு கிடைக்காமல் ஏறத்தாழ இரண்டாண்டுகள் காலதாமதமாகிக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் என்னை வல்லக்கோட்டை பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தேன். இந்நிலையையும் அவன் பாதத்திலேயே சமர்ப்பித்து அதற்கு அவனருளை வேண்டினேன். இதற்கு ஓர் வழிகாண அவன் பாதம் பற்றிப் பிரார்த்தித்தபோது என்னையே மெய்மறக்கச் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிரார்த்தித்துச் சென்ற மூன்றாம் நாள் எனக்குத் தந்தியின் மூலம் உத்தியோக உயர்வு கிடைக்கப் பெற்றது. பிறகும் என்னுடன் பணிபுரிந்து வந்த நண்பர் இப்பதவி எனக்குக் கிடைக்கக்கூடாது என்று தடுக்க முயன்றார். இதை அறிந்த நான் ''என்ன முருகா! உனதருளால் கிடைக்கப் பெற்ற இந்த உயர்வு மீண்டும் தடுக்கப்படுகிறதே'' என்று அவன் முன்னின்று வருந்தினேன். என்ன அதிசயம். எந்தக் கைகள் எனக்குக் கொடுக்கக்கூடாது என்று எழுதியதோ அதே கைகள் அந்த உத்தரவை எனக்களித்து வாழ்த்தியது. அன்று உணர்ந்தேன். வல்லக்கோட்டையில் வாழும் முருகனின் பாதம் வணங்கி அவனருளையும் ஆசியையும் பெற்றால் நாம் பேறுகள் அனைத்தும் பெறலாம் என்பதற்கு நான் பதவி உயர்வு பெறக்கூடாது என்று விழைந்தவர் கையினாலேயே பதவி உயர்வு பெற்ற இந்த நிகழ்ச்சி சான்று. நான் முருகனிடம் முழுமையாகச் சரணடைந்தேன். என்னை அவன் க்ஷேத்திரப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டேன். அன்று துவங்கிய பணியைத்தொடர்ந்து ஆற்றிவருகிறேன்.


திருக்கோயிலின் பழைய தோற்றம்

நான் அடைந்த இந்த பலன்கள் மற்றவரும் பெறலாமல்லவா அவனை வணங்கினால் - அவன் பணியில் தங்களை இணைத்துக் கொண்டால்எனக் கருதினேன். நான் கண்ணுற்ற காட்சியை - அங்கு நடைபெற்ற இந்த அற்புதத்தை எனது நண்பர்களிடம் மற்றும் நான் சந்தித்த முருகனடியார்களிடம் கூறி ''வாருங்கள் வல்லக்கோட்டைக்கு; பாருங்கள் வள்ளி மணாளனை 'என்று கூறி அழைத்தேன். வல்லக்கோட்டையிலே நான் முருகனைக் கண்டேன். அவனருளைப் பெற்றேன். ஆசியைப் பெற்றேன். நீங்களும் வாருங்கள், அவனைக்காண அவன் ஆசியைப் பெற என அழைத்தேன்.

நான் முருகன் என்று தனியாகக் கூறுவதில்லை. 'வல்லக்கோட்டை முருகன்' என்றும் 'வல்லக் கோட்டை முருகன்துணை' என்றும் கூறுவது வழக்கம். இதைக் கண்ணுற்ற எனது அருமை நண்பர் ஒருவர் 'அது என்ன நீங்கள் வல்லக்கோட்டை முருகன் என்று கூறச் சொல்லுகிறீர்கள்!. முருகன் என்ன 'வல்லக்கோட்டை முருகன்' - 'திருத்தணி முருகன்' என்று தனித் தனியாகவா இருக்கிறான்! முருகன் எல்லாம் ஒன்றுதானே. வல்லக்கோட்டை முருகன் என்று தனியாக அழைக்க வேண்டியதில்லை. நான் அப்படிகூறமாட்டேன்'', என்றும் கூறி விட்டார். என்ன விந்தை-அப்படிக் கூறியவர் தற்போது மூச்சும் பேச்சும் வல்லக்கோட்டை முருகன் துணை என்று கூறிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் அவர் நிர்வகித்து வரும் நிறுவனத்தின் மூலமாக வெளிவரும் விளம்பரங்களிலும் வல்லக்கோட்டை முருகன் துணை என்று போட்டுத்தான் வெளியிடுகிறார். அதுமட்டுமன்று- அப்படிக் கூறியவரை அவன் புகழ்பரப்ப - அவன் புகழ்பாட அவரையே அவ்வாலயப் பிரச்சாரக்குழுவின் தலைவராகவும் நியமித்து அவரைக்கொண்டே அவன் புகழைப் பாட வைத்துள்ளான் என்பதை நினைக்கும்போது நான் அவன் அருளைக்கண்டு மெய்மறக்கின்றேன். நான் அவருக்கு எத்தனை நாள் எடுத்துக் கூறியிருந்தாலும் என் கருத்தை ஏற்று அவருடைய கருத்தை மாற்றிக்கொண்டு இப்படி பேசுவாரா? வல்லக்கோட்டை முருகன் இட்ட உத்தரவை ஏற்றுக்கொண்டு இப்படி ஆடிக் கொண்டிருக்கிறார். அவன் புகழ் பாடிக்கொண்டிருக்கிறார்.

எனினும் அவர் கேட்டதற்கு நான் கூறிய பதில் இதுதான். 'என்னைப் பொறுத்த வரையில் முருகன் ஒருவன்தான் இருக்க முடியும். எல்லா

இடங்களிலும் குடிகொண்டிருக்கும் முருகனுக்கு சக்தியும் அருளும் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அது வெவ்வேறாக இருக்க முடியாது. ஆனால் நான் பல ஊர்களுக்குச் சென்று பல சேத்திரங் களைத் தரிசித்து இருக்கின்றேன். அங்கெல்லாம் நான் இன்று பெற்றுள்ள உணர்வைப் பெற முடிய வில்லை. அங்கெல்லாம் எனக்கு இப்படியொரு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. சிதலமடைந்து விட்ட பல ஸ்தலங்களுக்கும் போயிருக்கின்றேன். அங்கெல்லாம் இந்த உணர்வு கொண்டு என்னை அந்தப் பணிக்கு ஆளாக்கிக்கொள்ளவில்லை. இவ் விடத்தில் மட்டும் எனக்கோர் ஈடுபாடு ஏற்பட் டது. அவனருளால்தான் - அவன் இட்ட உத்தர வால்தான், இந்தச் சன்னிதானத்தில் தினம் தினம் கால்கடுக்க நின்று அவனை வணங்கி வரு கிறேன். ஒரே நாளில் மூன்று முறை சென்னை யிலிருந்து சென்று தரிசனம் செய்கின்றேன். பல அற்புதங்களை அவன் நிறைவேற்றுவதைக் கண் ணுற்றேன். எனக்கு வரம் தந்து, வாழ்வு தந்த முருகன் வல்லக்கோட்டையிலே வாழ்வதைக் கண் டேன். எனவே நான் 'வல்லக்கோட்டை முருகன்' என்றும், 'வல்லக்கோட்டை முருகன் துணை' என் றும் கூறி வருகிறேன். நான் முருகனைக் காண முடிந்த இடம் அதுவல்லவா. அதுமட்டுமல்ல; நான் ஓர் காலத்தில் ஆண்டவன் கிடையாது என்றும், ஆண்டவன் எங்கிருக்கின்றான் என்றும் எனதுபெற் றோர்களிடமே கேட்டுக் கொண்டிருந்த என்னை வல்லக்கோட்டைக்கு அழைத்துச் சென்று ஆண்ட வன் இருக்கிறான் என்பதை உணர்த்தி, 'நான் இங்குதான் இருக்கிறேன்' என்பதையும் எனக்குக் கூறி காட்சியளித்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி எங்கிருக்கின்றான் என்று கேட்ட என் நாவைக் கொண்டே (அவன் இங்கிருக்கின்றான் என்பதை எனக்கு உணர்த்திய தோடு மட்டுமன்றி) அவன் நாமத்தை தினமும் ஆயிரம் முறை பேச வைத்து வருகிறானே! அந்தவல்லக்கோட்டை வாழ்முருகன்! அவன் பெருமையே பெருமை. எனவேதான்வல்லக் கோட்டை முருகன் என்று கூறுகிறேன்.'' என்று எனது நண்பரிடம் கூறினேன். அவர் அன்று அதை ஏற்றுக் கொள்ளாமல் சென்றார். ஆனால் அவ ருடைய இன்றைய நிலமைதான் மேலே விவரித்துள் ளேன்.

எனக்கு இந்த முருகனை நினைக்கும்போதெல் லாம் பரம ஆனந்தம் ஏற்படும். ஏனென்றால் ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு விதத்தில் அவனு டைய காட்சி கிடைக்கும். நிகழும் நிகழ்ச்சிகள் ''வல்லக்கோட்டை முருகன் துணை'' என்று போட்டதில் தவறில்லை என நினைவூட்டும். என் அழைப்பிற்கிணங்கி வந்து செல்லும் பல அன் பர்கள், முருகனைச் சேவித்துச் செல்லும் வேளை யில் அவர்கள் அவனுடைய அழகையும் பொலிவை யும் கண்டு மெய்சிலிர்ப்பது மட்டுமல்லாமல் அங்கு ஓர் ஆனந்தத்தைப் பெற்றுத் திரும்புகிறோம்என்று கூறுவர், அடுத்த முறை மீண்டும் வருவர். தனியாக வரமாட்டார்கள். அவருடைய குடும்பத்தினரை யும் நண்பர்களையும் அழைத்துக் கொண்டுவருவர். வந்து அவர்கள் கூறும் வார்த்தை கேட்போர் மனதில் ஓர் தெய்வீக ஆனந்தத்தை உண்டாக்கும். 'ஐயா நான் சென்ற முறை இங்கு வந்தபோது மனக்குழப்பத்திலிருந்தேன். இங்கு வந்து சென்ற வுடன் அக்குழப்பம் நீங்கி மகிழ்ச்சியுடன் இருக் கிறேன். மீண்டும் வரவேண்டும் என உணர்வு கொண்டேன். அப்படி வருகையில் எனது குடும் பத்தினரையும் - நண்பர்களையும் அழைத்து வந்துள்ளேன்' இப்படி பலரும் பலவிதமான நிகழ்ச்சிகளை கூறி மகிழ்ச்சியுடன் மீண்டும் மீண்டும் அந்தச் சேத்திரத்திற்கு வந்தவண்ண முள்ளனர்.

—தொடரும்.

# வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் மதிற்சுவர் கால்கோள் விழா

— — —

வல்லக்கோட்டை முருகன் அடியார் திருப் புகழ் சபை திரு மணிக்கண்ணன், திரு கன்னியப் பன் ஆகியோரின் இறைவணக்கப் பாடலுடன் வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவிலில் 11-9-88 ஞாயிறு மாலை நான்குமணிக்கு கோவில் மதில்சுவர் கால்கோள்விழா, அதன், கல்வெட்டுத் திறப்பு விழா, கயப்பாக்கம் அறச் சுடர் திரு கே. முத்துலிங்கனார் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது.

திருப்பணிக்குழு உறுப்பினர் திரு மா.பெரிய சாமி, எம்.ஏ., எம்.லிட். பி.எஸ்சி. பி.எல். பி.ஜி. சிடிஇ. அவர்கள் விழாவிற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். கோயில் திருப்பணியைத்தொடங் கும் முகத்தான் தமிழ்நாட்டு இந்து சமய அற நிலையத் துறை ஆணையர் திரு தி. இராச கல் யாணசுந்தரம் இ.ஆ.ப. அவர்கள் மதிற்சுவர் கால் கோள் தொடக்க விழாவினை அதற்கான கல் வெட்டினைத் திறந்து வைத்துத் தொடங்கி வைத் தார்.

வள்ளண்மை மிக்க வல்லக்கோட்டை இறை யன்பர்கள் கோவிலுக்கு அர்ப்பணித்த நிழற் குடையினையும் இந்தியன் வங்கி கட்டித் தந்த கோவில் முன்புறமுள்ள கோவில் பாதுகாப்பு இரும்புக் கம்பிச் சுவற்றுக்கான சாவிகளையும் இறைப்பணி மன்றத்தலைவி திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் ஒப்படைக்க அதனைத் தமிழ் நாடு இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு என்.எஸ். இராமச்சந்திரன் பி.ஏ. பி.எல்., அவர்கள் கோவிலின் சார்பில் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய பெருமக்களின் விவரம் பின்வருமாறு:

கயப்பாக்கம் அறச்சுடர் திரு கே. முத்துலிங்க னார், உரைவேந்தர் திரு ஔவை நடராசன் அவர்கள், தமிழ்நாடு மறுவாழ்வுத்துறைஇயக்குனர் திரு சிவகுமார் இ.ஆ.ப., இலக்கணச் செம்மல் திரு பேராசிரியர் இராமசுப்பிரமணியம் அவர்கள், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், திரு சுராஜ் அவர்கள், திரு நல்லப்பன் அவர்கள்.

மதிற்சுவர் கால்கோள் விழாவிற்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் சென்னையிலுள்ள இலங்கைத் துணை உயர் ஆணையர் அலுவலக மக்கள் தொடர்பு அதிகாரி திரு எம். வி. அரங்க நாதன் அவர்கள் நன்றி கூறினார். திருமதி சௌந்தரா கைலாசம் யாத்த வல்லக்கோட்டை முருகன் பற்றிய பாடல்கள் இசையுடன் திரு கன்னியப்பன் அவர்களால் பாடப்பெற்றது.

உ

# இறைவனார் அருட்காட்சி

சு. சண்முகம்,

கணக்கு அலுவலர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பது இறைவனைப் பற்றி வழக்கமாகச் சொல்லப்படுவது. தமிழ் நாடெங்கும் விளங்கிவரும் இறை உறை இல்லங்களாம் திருக்கோயில்களில் உழவாரத் தொண்டுபுரிந்தும் இறைவனைப் புகழ்ந்து 313 பதிகங்களில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் இயற்றியருளிய திருநாவுக்கரசர் தாம் பாடிய பாடல்களில் இறைவனைக் கண்ட காட்சியினை விவரித்திருக்கிறார். எப்படி வாழ்ந்தால் நாமும் காணலாம் என்பதனையும் எடுத்துரைத்துள்ளார்.

அவற்றில் சில:

''விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே''

விறகில் தீயோ, பாலில் நெய்யோ இல்லை என்று எவரும் மறுப்பதற்கில்லை. இவையிரண்டும் முயற்சியினால் வெளிப்படுத்தப்படுகின்றன. அதைபோல் மனித மன உள் உணர்வில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவினை உணர்ந்து உள் உணர்வு (மனச்சாட்சி) வழி நடப்போர் இறைவனைக் காணலாம். வெளிப்படுத்தும் சொற்களைவிட உணர்தலே முக்கியமானது.

இறைவன் எவ்வெப் பொருட்களில் எவ்வாறு இருக்கிறார் என்பதையும் இயம்புகிறார் நாவுக்கரசர்.

''மண்ணாகி விண்ணாகி மலையுமாகி
வயிரமுமாகி மாணிக்கந் தானேயாகி

கண்ணாகி கண்ணுக்கோர் மணியுமாகி
கலையாகி மலை ஞானம் தானேயாகி

பெண்ணாகி பெண்ணுக்கோர் ஆணுமாகி
பிரளயத்துக்கு அப்பால் ஓர் அண்டமாகி

எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடராம் எம்மடிகள் நின்றவாறே''

தீயாகி நீராகித் திண்மையாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகித்

தாயாகித் தந்தையாய்ச் சார்வுமாகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியுமாகிக்

காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானேயாகி

நீயாகி நானாகி நேர்மையாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள்
நின்றவாறே''

இவ்வாறே மேலும் எட்டுப் பாடல்களில் இறைவன் உலகத்துப் பொருட்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்து நிற்பதனை விவரித்திருக்கிறார். இவ்வாறு நிறைந்து நிற்கும் இறைவனே! உன்னை நான் என்னென்னவாகி நிற்கிறாய் என்று திரும்பத் திரும்பச் சொல்வதன்றி வேறு எவ்வாறு சொல்லிப் புகழ்வது என்றும் கேட்கிறார்.

அப்பாடல்:—

''நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து
மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோர் அமுதமானாய்
மறை நான்குமானாய் ஆறங்கமானாய்

பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை

என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என் சொல்லி ஏத்துகேனே''

என்ன சொல்லி ஏத்துவது என்று திகைத்த திருநாவுக்கரசுப் பெருமான் ஒருவாறு தெளிந்து,

''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ

ஒப்புடைய மாதரும் ஒன்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ

துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம்
துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறுணர்ந்த செல்வன் நீயே''

என்று ஏத்திப் புகழ்கிறார்.

இவ்வாறு தெளிவு பெற்று இறைவன் எழுந்தருளியுள்ள பல தலங்களையும் தரிசித்து உழவாரப் பணி செய்து வருங்கால், கயிலை மலையானை நேரில் கண்டே தீரவேண்டும் என்ற வேட்கை மிகக் கொண்டு அப்பரடிகள் கயிலை நோக்கிப் பயணம் மேற்கொண்டபோது இறைவன் தடுத்தாட்கொண்டு தன்கோலத்தினைத் திருவையாற்றில்

காணுமாறு அருளுகிறார். திருவையாற்றில் தான் கண்ட காட்சியினைப் பதினொரு பாடல்களில் விவரிக்கிறார். அதில் 11வது பாடல்;;

''வளர்மதிக் கண்ணியினானை வார்குழலா
ளொடும்பாடி
களவு படாததொரு . காலங் காண்பான்
கடைக்கணிக்கின்றேன்

அளவு படாததொரு அன்போடு ஐயாறு
அடைகின்றபோது
இளமண நாகு தழுவி ஏறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்த்திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்''

களவுபடாத, எக்காலத்தும் அளவு படாத (எல்லையற்ற) அன்புடன் திருவையாறு சென்று கண்ட காட்சியிது. பிறிதோரிடத்தில் தான் கண்ட இறைவடிவினை முழுதுமாக விவரிக்கிறார். காண்டற்கரிய காட்சி.

''நீரேறு திருமேனி நிகழக்கண்டேன்
நீள்சடைமேல் நிறைகங்கை யேறக்கண்டேன்

கூனேறு கொடுமழுவான் கொள்ளக் கண்டேன்
கொடுகொட்டி கையலகு கையிற்கண்டேன்

ஆடேறு சென்னியணி மதியுங்கண்டேன்
அடியார் கட் காரமுதமாகக் கண்டேன்

ஏறேறு இந்நெறியே போதக் கண்டேன்
இவ்வகையெம் பெருமானைக் கண்டவாறே''

இப்பதிகத்தில் இறைவடிவினை விவரித்து பதினொரு பாடல்கள் உண்டு. அவற்றில் ஒன்றினிறுதியில் இவ்வாறு சொல்கிறார்.

''அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்

இவனிறைவன் என்றெழுதிக்காட்டொணாதே''

அதாவது என்னால் எழுதிக் காட்டுதல் இயலாது. நீங்களே கண்டு கொள்ளுங்கள் என சில பாடல்களில் இறைவனைக் காண்பதற்கான வழிமுறைகளையும் இயம்புகிறார்.

அவற்றினை விரிக்கின் மிகும். எனவே ஓரிரு பாடல்களைப் பார்க்கலாம்.

''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே
தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும்
திரிமயக்கி
இடம்படும் ஞானத்தியால் எரிகொள இருந்து
நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணா
லாமே''

உடலாகியுள்ள இவ்விருள் வீட்டில் உள்ளமாகிற அகலில் தான் எனும் அகந்தை அடக்கப்படுதலாகிய நெய்யினைவிட்டு உயிராகிய திரியினை ஞானத்தீயினால் ஏற்றி ஆழ்ந்து சிந்திக்கின் இறைவன் திருவடிகளைக் காணலாம். யார் ஆழ்ந்து சிந்திக்கிறார்கள்? யார் தான் எனும் அகந்தைதனை அடக்கிக் கொள்கிறார்கள்? பின் எப்படி இறைவனைக் காண்பது?

---

**திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்**

## திருக்கார்த்திகை பிரம்மோற்சவம்

அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகைப் பிரம்மோற்சவம் இவ்வாண்டு 14-11-88 திங்கட்கிழமை தொடங்கி 23-11-88 புதன் கிழமை முடிய நடைபெற உள்ளது.

கார்த்திகை மகாதீபம் 23-11-88, புதன் கிழமை மாலை 6 மணிக்குக் கொண்டாடப் பட இருக்கிறது.

''கார்த்திகைக்குக் கார்த்திகை நாள்ஒரு ஜோதி

மலைநுனியில் காட்டா நிற்போம்

வாய்த்த அந்தச் சுடர் காணில் பசிப்பிணியில்

லாது உலகில் மன்னி வாழ்வார்

பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு

தவிரும் அது பணிந்தோர் கண்டோர்

கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு

முத்திவரம் கொடுப்போம் என்றார்''

என்பது அருணாசலப் புராணம்.

பக்தர்கள் திரளாக வந்து தீபதரிசனம் காண ஆலயத்தினரால் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—என். ஆர். லிங்கமராஜா,
உதவி ஆணையர்-நிர்வாக அதிகாரி.

---

''மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தைவித்திப்
பொய்மையாம் களையை வாங்கி பொறை
யெனும் நீரைப்பாய்ச்சி
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலி
இட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையும்
அன்றே''

நேர்மையான விருப்பங்களுடன் உண்மை நெறிநின்று தற்கால உலகில் நிறைந்து நிற்கும் பொய்மையானவற்றினைத் துணிந்து களைந்தெறிந்து பொறுமையுடன் தந்நிலை உணர்ந்து அடக்கத்துடன் செம்மை வாழ்வு வாழ்பவர்களுக்கு சிவகதி விளையும் என உழவுத் தொழிலினை உதாரணமாக்கி அப்பரடிகள் விவரிக்கிறார். இது முயற்சித்தால் முடியக் கூடிய ஒன்றே. உண்மை நிலை உணர்ந்து உண்மை நெறி வாழ்ந்து இறைவனைக் காண யாவரும் முயற்சிப்போமாக. முயற்சி திருவினையாக்கும்.

**திருச்சிற்றம்பலம்.**



# கம்பரின் இராமாவதாரம்

டாக்டர்
**த. அமிர்தலிங்கம்**

## -[2]-

தெய்வப் பிரசாதத்தை ஏந்தி யாகத் தீயிலிருந்து வெளிவந்த பூதம் அதை ரிஷ்ய சிருங்க முனிவரின்முன்வைத்து வணங்கிவிடைபெற்றுமறைகிறது. முனிவரும் அப்பிரசாதத்தை வசிட்டரிடம் வழங்க, வசிட்டரும் அதனைத் தசரதரிடம்வழங்கி பட்டமகிஷிகள் மூவருக்கும் அதனைப் பகிர்ந்து வழங்குமாறு கூறுகிறார்.

தசரதரும் அப்பிரசாதத்தை மூன்றாகப் பிரித்து முதல் பகுதியைக் கோசலைக்கும், இரண்டாம் பகுதியைக் கைகேயிக்கும், மூன்றாவது பகுதியைச்சுமித்திரைக்கும்வழங்குகிறார்; பங்கிடும் போது உதிர்ந்து விழும் பிரசாதத்தையும் வீணாக்கிடாமல் திரட்டி அதையும் சுமித்திரைக்கே வழங்குகிறார். தெய்வத்தைப் பிரார்த்தித்துத் தேவியர் மூவரும் பிரசாதத்தைப் பக்தியுடன் உண்டு மகிழ்கிறார்கள்.

புத்திரகாமேட்டி யாகத்தை இவ்வாறு சிறப்புறச் செய்து முடித்த ரிஷ்யசிருங்க முனிவரின் திருவடிகளைப் பணிந்து 'எந்தை நின் அருளினால் இடரின் நீங்கியே உய்ந்தனன் அடியேன்' என்று தசரதர் வணங்க, அவரும் தசரதனை மகிழ்ச்சியோடு வாழ்த்தித் தம் இருப்பிடத்திற்குப் புறப்பட்டு செல்கிறார். யாகத்திற்கு வருகை புரிந்த மாதவர்களும், மன்னர்களும், சிற்றரசர்களும் விருந்தினர்களும் அவ்வாறே தசரதரிடம் விடைப் பெற்றுச் செல்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப பொன் பொருள், பட்டாடைகளை வழங்கிச் சிறப்பினைச் செய்ய தசரதர் மறந்திடவில்லை.

தெய்வப் பிரசாதத்தை உண்ட தேவியர் மூவரும் விரைவில் கருப்பம் அடைகிறார்கள். அவர்கள் திருமுகமும், திருவயிறும் பொலிவுபெறத் திகழ்ந்த பான்மையைக் கம்பர்

''தெரிவையர் மூவரும் சிறிதுநாள் செலீஇ
மருவிய வயாவொடு வருத்தம் துய்த்தவர்
பொருவரு திருமுகம் அன்றியே பொற்புநீடு
உருவமும் மதியமோடு ஒப்பத்தோன்றினார்''

என்று பாடுகிறார்.

சித்திரை மாதம் வளர்பிறை நவமியில் ஆதித்ய வாரத்தில், மாத்யானிய வேளையில் புனர்பூச நட்சத்திரம் 4ஆம் பாதம் சந்திரன் ஆட்சியிலும், குரு உச்சத்திலும் அமைந்த கடகராசியில் கடக இலக்கினத்தில் இராமனைக் கோசலை இவ்வையம் உய்யப் பெற்று உவக்கிறாள்.

''மேடமா மதி, திதி நவமி, மீன் தழை
நீடுறு மாலை கர்க்கடகம் நீதிசேர்
ஓடைமா களிற னான் உதயராசி கோள்
நாடின் ஏகாதசர் நால்வர் உச்சரே''

என்று அருமறைகளாலும் உணர அரியவனாகிய அஞ்சனக் கருமுகில் இராமனைக் கோசலை பயந்த மங்கல வேளையில் கோள்கள் நின்ற தன்மையைக் காட்டுகிறார் கம்பர். இராமன் பிறந்த மறுநாள் தசமியன்று கைகேயி பூசம் நட்சத்திரம் நிலவிய புனித வேளையில் தியாகச் சுடர் ஒளிவீசும் கண்களைக் கொண்டு திகழ்பவனான பரதனைப்பெற்று மகிழ்கிறாள். சுமித்திரை தன் பங்கிற்கு ஒன்றிற்கு இரண்டு குழந்தைகளாக இலக்குவன, சத்ருக்கனன் ஆகிய இருவரை முறையே ஆயில்யம், மகம் நட்சத்திரங்களில் பெற்று மகிழ்கிறாள்.

இராமன் பிறந்துவிட்டான் என்ற ஆனந்த சேதி கேட்டு அயோத்தி நகர மக்கள் மட்டுமேயல்லாமல் அமர லோகத்துத் தேவர்களும் ஆடிப் பாடி மகிழ்கிறார்கள். இதனைக் கம்பர்

''ஆடினர் அரம்பையர் அமுத ஏழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடினர் அரக்கர் என்றுவக்கும் விம்மலால்
ஓடினர் உலாவினர் உம்பர் முற்றுமே''

என்று காட்டுகிறார். தசரதர் மக்கள் பிறந்த மகிழ்ச்சியில் திளைத்து முரசினை அறைவித்து விழாக் கொண்டாடச் செய்கிறார். ஆலயங்கள் தோறும் விசேட பூசைகள் நிகழ்த்தவும், நாடெங்கும் ஆடலும் பாடலும் அன்னதானமும், கலை விழா நிகழ்ச்சிகளுமாக மைந்தர்கள் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடச் செய்கிறார். தசரதர் மக்கள் வரிசெலுத்த வேண்டியதில்லை என்று உத்திரவிடுவதோடு பொக்கிஷ சாலைகள் அனைத்தையும் திறந்து யாவரும் வேண்டிய செல்வம் அனைத்தையும் வேண்டுமட்டும் வாரிக் கொள்ள உத்திரவிடுகிறார். பொக்கிஷ சாலைகளில் பொன் மணிகளை வாரிக் கொள்ளும் மக்கள், அவற்றைத் தங்கள் தங்கள் இல்லங்களுக்குக கொண்டு செல்ல வேண்டிய தேவை இல்லாதபடியால் எதிர்ப்படுகிறவர்களுக்கெல்லாம் அவற்றை வாரி வழங்கு

கிறார்கள். வாசனாதி திரவியங்களை மழைபோல் பொழிந்தும், நவமணிகளைப் பொழிந்தும், அயோத்தி நகர வீதிகள்தோறும் செல்வங்களே குவிந்து கிடக்க 'இராமன் பிறந்தான்' 'பரதன் பிறந்தான்' 'இலக்குவனன் பிறந்தான்' 'சத்ருக்கனன் பிறந்தான்' என்று அவரவர்களுக்கு இடப்பட்ட பெயர்களைக் கூறிக் கூறி பன்னிரு நாட்கள் மக்கள் மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள்.

தசரதரும் ஆட்சிப் பொறுப்பினை அமைச்சர்களிடம் ஒப்புவித்து மக்களை வளர்க்கும் பொறுப்பில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு விடுகிறார். மக்கள் நால்வரிலும் முன் பிறந்த இராமனிடம் தசரதர் கொண்ட பாசத்தை என்னென்பது? 'இராமனே தாம், தாமே இராமன்' என்பதாக அவனோடு உயிரும் உணர்வும் ஒன்றிப் போய் விடுகிறார் தசரதர்

''காவியும் ஒளிதரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை அலதோர்
ஆவியும் உடலமும் இலதென அருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்''

என்று கம்பர் காட்டுகிறார்.

உலகெல்லாம் காக்கவும் போற்றவும் தோன்றிய இராமரிடம் அன்பு பாராட்டாதார் யாரிருக்க முடியும்? ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர்

''அங்கண் நெடுமதில் புடைசூழ் அயோத்திஎன்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்திற்கு ஓர் விளக்காய்தோன்றி
விண்முழுதும் உயக் கொண்ட வீரன்'

என்று இராமனைப் போற்றி, தாமே தாயாகவும் தந்தையாகவும் மாறி இராமரைத் தாலாட்டியிருக்கிறார் அல்லவா? குலசேகரர் இராமரைத் தாலாட்டும் அந்தத் திவ்வியப் பாசுரங்களைப் படித்தும் பாடியும் உருகாதார் யார்?

''மன்னு புகழ்க் கௌசலைதன் மணிவயிறு
வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்!
செம்பொன்சேர்
கன்னிநன் மாமதின் புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ'
'புண்டரிக மலரதன்மேல் புவனியெலாம்
படைத்தவனே
திண்திறலாள் தாடகைதன் உரமுருவச் சிலை
வளைத்தாய்
அண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென்
கருமணியே
எண்திசையும் ஆளுடையாய்இராகவனே
தாலேலோ''

என்று குலசேகரர் தாலாட்டுப் பாடி மகிழ்ந்திருப்பதைப் போலவேதான் தசரதரும் தம் மகன் இராமனைத் தாலாட்டியிருப்பார்; கோசலை கைகேயி, சுமித்திரை ஆகியோரும் இராமனைத் தாலாட்டியிருப்பார்கள். 10000 பாடல்களால் இராமசரிதத்தைப் பாடிய கம்பர், இராமரைத் தாலாட்டும் பாடல்களை ஏனோ பாடவில்லை. இராமரின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளையும் விவரித்து அவர் பாடவில்லை. இராமரே கண்ணனாக வந்து அவதாரம் செய்யும்போது அவருடைய பால லீலைகளைப் பாடிக் கொள்ளலாம் என்று கம்பர் கருதி அவற்றைப் பாடாமல் விட்டு விட்டார் போலும்.

குமாரர்கள் குறைவற வளர்ந்து யானை ஏற்றம், குதிரை ஏற்றம், இரதஏற்றம், வில்முதலிய

## 'உலகமே கடவுள் மயம்!

திமிங்கலத்திற்குத் தன் நிறையில் 309ல் ஒரு பங்கு தான் மூளையுள்ளது. யானைக்கு 100ல் ஒரு பங்கே உள்ளது. மனிதனுக்கோ தன்னெடையில் 45ல் ஒரு பங்கு மூளையுள்ளது. உலகமுழுவதையும் கடவுள் மயமாகக் காண்பதற்கன்றோ மனிதனுக்கு ஆண்டவன் பெருத்த மூளையைக் கொடுத்தான்.

—கவியோகி சுத்தானந்த பாரதி.


படைக்கலப் பயிற்சிகளைக் குலகுருவாகிய வசிட்டரிடம் முறையாகக் கற்றுக் கொள்வதை இனிக் கூறுகிறார் கம்பர், இராமனும், இலக்குவனும் ஒருவரைவிட்டு ஒருவர் ஒருநொடி நேரமும் பிரியாமல் இணைந்தே இருந்து கலைப் பயிற்சிகளைக் கற்றுக் கொள்கின்றனர். பரதனும், சத்ருக்கனும் அவ்வாறே ஒருவரைவிட்டு ஒருவர் ஒரு நொடி நேரமும் பிரியாமல் இணைந்தேகலைகளைக்கற்றுத் தேர்கின்றனர். கலைபயிலும் நேரங்களில் மட்டுமல்லாமல் விளையாடும் நேரங்களிலும், கண்ணுறங்கும் நேரங்களிலும்கூட இராம, இலக்குவனர் இருவரும் இணை பிரிவதில்லை. அவ்வாறே பரத சத்ருக்கனர்களும்கூட எப்போதும் இணைந்தே வளர்கிறார்கள். அதனால்தான் இந்நால்வரைக் குறிப்பிடும்போது இராம, இலக்குவனர், பரதச் சத்ருக்கனர் என்று வரிசைப்படுத்திச் சொல்வது வழக்கமாக உள்ளது. தம் மக்கள் இவ்வாறு இணைபிரியாதவர்களாய், கல்வி கேள்வி படைக்கலப் பயிற்சிகளிலும் இணையில்லாதவர்களாய் தேர்ச்சி பெற்றுத் திகழக் காணும் தசரதர் கரை செய அரியதோர் களிப்பில் மூழ்கி விடுகிறார். இவ்வாறு தசரதர் மகிழ்ந்து இருக்கும் ஓர் நாளில் தான், விசுவாமித்திர முனிவர் தசரதரைத் தேடி அவர் வீற்றிருக்கும் கொலு மண்டபத்திற்கே வந்து விடுகிறார்.

தேவேந்திரனின் சபாமண்டபத்தோடு ஒப்பு கூறத் தக்கதாய் இருக்கிறது தசரதரின் கொலு மண்டபம்,. அதில் தசரதர் தேவேந்திரனைப் போல் வீற்றிருக்கிறார். அவருடன் வசிட்டமுனிவரும் சுமந்திரன் முதலான அமைச்சர் பெருமக்களும் உடன் வீற்றிருக்கிறார்கள். அப்பொழுது அங்கே திடீரென எழுந்தருளுகிறார் விசுவாமித்திர மாமுனிவர்.

'மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர்மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும் படைப்பேன்
ஈண்டெனாத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்''.

என்று கம்பர் திரிசங்கு மன்னனுக்காக சொர்க்கத்தைப் படைத்த விசுவாமித்திர முனிவரின் பெருஞ் சிறப்பினைப் பாராட்டிக் கூறுகிறார்.

விசுவாமித்திரர், முனிவர் ஆவதற்கு முன்னால் கோசிகன் என்ற பெயரில் நாடாளும் மன்னனாகத் திகழ்ந்தவர். அவர் தம் பரிவாரங்களோடு வசிட்ட முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்ற போது வசிட்ட முனிவர் தம்மிடம் இருந்த காமதேனுவிற்கு நிகரான நந்தினி என்ற பசுவினால் கோசிகனுக்கும் அவனுடைய அளவிறந்த சேனைகளுக்கும் அறுசுவை உணவினைப் படைத்தார். ருசியான பதார்த்தங்கள் பலவற்றுடன் கேட்பவை அனைத்தையுமே படைத்துக் கொடுக்கவல்லது வசிட்டரின் பசு என்பதைக் கண்டுகொண்ட கோசிகன், அப்



பசுவைத் தனக்குக் கொடுக்குமாறு கேட்டபோது வசிட்டர் கொடுக்க மறுத்துவிட்டார். ''நீர் என்ன கொடுப்பது! இப்பசுவை நானே எடுத்துச் செல்கிறேன்'' என்று கூறிய கோசிகன் அப்பசுவைக் கட்டித் தன் அரண்மனைக்கு இழுத்துச் செல்ல முயன்றான். ஆனால் வசிட்டரின் பசுவோ வீரர்கள் பலவற்றைத்தானே உண்டாக்கிக் கோசிகனின் அளவற்ற சேனைகளையும் அழித்துவிட்டது. அதன் பிறகுதான் கோசிகன் வசிட்டரின் தவ பலத்தைத் தெளிந்து தாமும் அத்தகைய தவ பலத்தைப் பெற வேண்டித் தம் இராஜ்ஜியத்தைத் துறந்து தவசியாகி விட்டார்.

கோசிக முனிவர் கடுமையான தவம் செய்து ரிஷிகளுக்கு எல்லாம் தலைவராகும் இராஜரிஷி பட்டம் பெற்றார். பிரம்மரிஷியான வசிட்டர் வாயால் பிரம்மரிஷி பட்டத்தைத்தாம் பெறவேண்டும் என்பதற்காக மேலும் மேலும் கடுமையான தவங்களை அவர்செய்துகொண்டிருந்தபோதுதான் திரிசங்கு மன்னனை உடலோடு சொர்க்கம் அனுப்பும் முயற்சியில் தம் தபோபலம் அனைத்தையும் அவர் செலவழிக்க நேர்ந்தது. திரிசங்கு மன்னன், தசரத மன்னனுக்கு முன் சூரிய குலத்தில் தோன்றி சிறந்திருந்த ஓர் மன்னன் ஆவான். அவனுக்குத் தன் தேகத்துடனே சுவர்க்கம் போகவேண்டும் என்பது ஆசை. தன் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு அப்பொழுதும் அவனுக்குத் குருவாக இருந்த வசிட்டரிடம் வேண்டிக் கொண்டான். ''இயலாது, வேண்டாம் இம்முயற்சி'' என்று வசிட்டர் தடுத்தும், திரிசங்கு கேளாமல் வசிட்டருடைய புதல்வர்களை அணுகித் தன்னைத் தேகத்துடன் சொர்க்கம் அனுப்ப வேண்டிக்கொண்டான். ஆனால் அவர்களோ ''குருவான வசிட்டரை அவமதிக்கும் நீ சண்டாளன் ஆகக் கடவாய்'' எனத் திரிசங்குவைச் சபித்து விட்டனர்.

வசிட்டகுமாரர்களின் சாபத்தால் சண்டாளனாகிவிட்ட திரிசங்கு விசுவாமித்திரரைப் பணிந்து நிகழ்ந்ததனைத்தும் கூறித் தன்னை உடலோடு சொர்க்கம் அனுப்ப வேண்டிக் கொண்டான். வசிட்டரால் முடியாததைத் தாம் செய்து காட்ட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவரான விசுவாமித்திரரும் கடுமையான வேள்வி ஒன்றைச் செய்தார். ஆனால் அவியைப் பெற்றுக் கொள்ள அவர் தேவர்களை அழைத்தபோது யாரும் வரவில்லை. அதனால் விசுவாமித்திரர் கடுங்கோபம் கொண்டு தன்கையில் வைத்திருந்த நெய்க்கரண்டியைஉயரத் தூக்கி ''திரிசங்குவே சொர்க்கம் போ'' என்று உத்திரவிட திரிசங்கும் தன் தேகத்துடனே சொர்க்கம் போனான். ஆனால் இந்திரனோ திரிசங்குவைச் சொர்க்கத்தில் அனுமதிக்காமல் கீழே தள்ளிவிட்டான். தலைகீழாக விழுந்த திரிசங்கு கதறியவாறு கீழே வர, விசுவாமித்திரர் திரிசங்குவை ஆகாயத்திலேயே நிற்கச் செய்து அவனுக்கென்றே ஒரு தனி சுவர்க்கத்தைத் தன் தவவலிமையால் படைத்து விட்டார். இத்தகைய விசுவாமித்திரரின் ஆற்றலைத்தான் கம்பர் 'மன்னுயிர் அடங்கலும் உலகமும் வேறமைத்து'' என்று போற்றயிருக்கக் காண்கிறோம்.

இத்தகைய விசுவாமித்திர முனிவர் தேவர்கள் பல சோதனைகளுக்கு ஆளாக்கியபோதும் தம் தளராத மனஉறுதியாலும் கடுமையான தவபலத்தாலும் வசிட்டரே வாழ்த்தும் பிரம்மரிஷிப் பட்டத்தையும் முயன்று பெற்றவர் ஆவார். அவரே இப்பொழுது திடீரென வரக்காணும் தசரதரும் பிரமன் வரக் காணும் இந்திரன் எப்படி அவரை எதிர்கொண்டு வரவேற்பானோ அப்படியே தாமும் போய் விசுவாமித்திரரை எதிர்கொள்கிறார்.

''நான் செய்த தவமும், என் மக்கள் செய்த தவமும் என் குலத்துதித்த முன்னோர்கள் எல்

லோரும் இதுகாறும் செய்திருக்கும் புண்ணியமுமே இன்றைய தங்கள் வருகைக்குக் காரணமாய்அமைந்திருக்கிறது. உங்களைக் கண்ட என் தீவினைகள் யாவும் அழிந்துவிட்டன. என்போல் பாக்கியசாலி வேறுயார் இருக்க முடியும்?'' என்று கூறி விசுவாமித்திரரைப் புகழ்கிறார் தசரதர்.

விசுவாமித்திரரும் தசரதரைப் பதிலுக்குப் புகழ்ந்து பேசுகிறார். ''என்னைப் போன்ற முனிசிரேட்டர்களானாலும் சரி, தேவர்கள் ஆனாலும் சரி, ஒரு இடையூறு வருமானால் சிவபெருமான் உறையும் கயிலை மலைக்கு, திருமால் உறையும் பாற்கடலுக்கு, நான்முகன்உறையும சத்தியலோகத்திற்கு, தேவேந்திரன்ஆளும் அமராவதிக்கு அல்லது நீயாளும் இந்த அயோத்தி நகருககுத் தானே வந்தாகவேண்டும். எங்களுக்குப்பாதுகாப்பு நீங்கள் அல்லாமல் வேறுயார் தசரதா?'' என்று விசுவாமித்திரர் மும்மூர்த்திகளோடும் தேவேந்திரனோடும் ஒப்பிட்டுத் தசரதரைப் போற்றுவதைக் கம்பர்

''என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறொன்று உடைய ரானால்
பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்து
அந்நகரும் கற்பக நாட்டணி நகரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரம் அல்லாது புகலுண்டோ
இகல் கடந்த புலவு வேலோய்''

என்று பாடியிருக்கக் காண்கிறோம். விசுவாமித்திரருக்குத் தான் என்ற அகம்பாவம் எப்பொழுதும் உண்டு. அவ்வகம்பாவ குணத்தைக் சுட்டும் வகையில் ''என் அனைய முனிவரர்'' என்ற தொடரை இப்பாடலில் ஆண்டிருப்பது கம்பரின் கவித்திறமையைக் காட்டுவதொன்றாகும்.

விசுவாமித்திரர் தசரதரை மேலும் புகழ்ந்து பேசுவதைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்

''இன் தளிர்க் கற்பக நறுந்தேன் இடைதுளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போநது
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழலொதுங்கிக்
குறை இரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குலமணித் தோள் சம்பரனைக்
குலத்தொடும் தொலைத்து நீ கொண்டு
அன்றளித்த அரசன்றோ புரந்தரன்
இன்று ஆள்கின்றது அரசே''

என்ற பாடலாலும் காட்டுகிறார். முன் பாடலில் மும்மூர்த்திகளும் தேவேந்திரனும் தசரதனுக்கு ஒப்பு என்று காட்டிய கம்பர் இப்பாடலால் தசரதனுக்கு மும்மூர்த்திகள் மட்டுமே ஒப்பு; தேவேந்திரன் ஒப்பாகான் என்று வேறுபட உரைத்திருக்கும் நயமும் அறிந்து மகிழத்தக்கது. ''தேவேந்திரன் சம்பராசுரனிடம் அமராபதியின்உரிமையை அன்று இழந்தபோது உன்னிடம் தானே வந்து குறையிரந்தான் தசரதா! நீ தானே சம்பராசுரனிடம்யுத்தம் செய்து அவன் குலத்தில் ஒருவரும் மிச்சம் இன்றிப் போர் செய்து வென்றாய்! நீ மீட்டுக் கொடுத்த அரசைத்தானே தேவேந்திரன் ஆண்டு கொண்டிருக்கிறான். தேவேந்திரனே வந்து உன்னைத் தஞ்சம் அடைந்து வாழ்வு கண்டிருப்பதைஎண்ணித் தான் நானும் அமராபதி செல்லாமல் அயோத்திக்கே வந்து விட்டேன்' என்று விசுவாமித்திரர் தசரதரைப் புகழத், தசரதர் கரைகாணா மகிழ்ச்சி கடலில் திளைத்துத் தன்னிருகரங்களையும் கூப்பியவாறு விசுவாமித்திரரை மீண்டும் வணங்கி ''நானே பாக்கியசாலி சுவாமி! நானே பாக்கியசாலி! உங்களுடைய இந்தப் பாராட்டைக்கேட்கும் போதுதான் இத்தனை ஆண்டுகள் இம்மண்ணை ஆண்ட பயனையே அடைந்து விட்ட மனநிறைவு பெறுகிறேன்'' என்று கூறி ''சுவாமி! தாங்கள் என்ன வேண்டுமோ கூறுங்கள்; நான்உடனேஅதை செய்து முடிக்கிறேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

இப்படி ஆர்வம் உந்த, மகிழ்ச்சி பொங்க விசுவாமித்திரர் வேண்டுவது எதுவாயினும் அருள்வதாக உறுதி கூறும் தசரதரே, விசுவாமித்திரா தாம் வேண்டுவதைத் தெரிவிக்கும்போது மிக நடுங்கித் தம்முயிரே பறிபோவதறகு ஒப்பான கொடும் துயரத்திற்கு 'ஆளாகி விடுகிறார். அப்படி என்ன வரததை விசுவாமித்திரா கேட்டுவிடுகிறார்? தசரதரின இன்னுயிரையா அவர் கேட்டு விடுகிறார்? அப்படி உயிரைக் கேட்டிருந்தாலும்கூட வருந்தியிருக்க மாட்டாரே தசரதா! தசரதரின் உயிரை விடவும் மேலான இராமனை அல்லவா அவர் தமக்குத் தருமாறு கேட்டு விடுகிறார். ''தசரதா! உலகை நேசப்பதனாலேயே எனக்குவிசுவாமித்திரர் எனற பெயர் வழங்குகிறது; அதை நீயும் அறிவாய். இப்போதும் உலக நலனுக்காகவே நான் ஒரு தவ வேள்வி ஆற்றப்போகிறேன். அவ்வேள்விக்கு இராக்கதர்களால் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க நீ உன் மக்கள் நால்வரில் இராமன் ஒருவனை மட்டும் எமக்குத் தந்துவிடு' என்று விசுவாமித்திரர் தசரதரிடம் வேண்ட அச்சொற்கள் காதுல் விழக் கேட்கும் தசரதர் தம் உயிர் நிலையில் வேலையும் பாய்ச்சி அதனால் உண்டாகும் புண்ணில் நெருப்பினையும் சொருகிடுவதைப் போன்ற கொடுநதுயருக்கு ஆளாகிவிடுகிறார்.

''தருவனத்துள் யான் இயற்றும் தவவேள்விக்கு
இடையூறாத் தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்றடை காம வெகுளியென
நிருதர் இடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தினை நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி என உயிர் இரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்''

''எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணில்ஆம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச் செவியில் புகுதலோடும்
உள்நிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர் நின்று ஊசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்
கடுந்துயரம் கால வேலான்''.

என இருபாடல்களால் தசரதர் உற்ற துயரினைச் சொல்லோவியமாக்கிக் காட்டுகிறார் கம்பர்.

தசரதர் இப்படிப்பட்ட துயரினை அடைவதற்குக் காரணமும் இருக்கிறது. அறுபதினாயிரம் ஆண்டுகளாக அவர் மைந்தர்கள் இன்றி வாடியிருந்ததும், இராமன் பிறந்தநாள் முதலாக அவனை எந்தநேரமும் தம் கண்ணின் மணிபோல் கருதிப் பேணி வருவதும், இராமனைப் பிரிந்து ஒரு சில நாழிகை நேரம்கூட அவரால் இருக்க முடியாது என்பதும் அவர் உறும் இத்தகைய வாட்டத்திற்குக் காரணங்களே என்ற போதும், சலபோசன முனிவரிடம் தசரதர் பெற்றிருக்கும் சாபம் ஒன்றும் அவரை இத்தகைய கடும் துயரத்திற்கு ஆளாக்கி விடுகிறது. ஒருமுறை தசரதர் வேட்டையின் நிமித்தம் வனத்திற்குச் சென்றிருந்தார். ஆற்றங்கரையோரம் அடர்ந்திருந்த மரங்களின் நடுவே ஒளிந்திருந்து விலங்குகளின் வருகையை எதிர் பார்த்தவாறு இருந்த தசரதர், குடுகுடுவென நீரில் உண்டான ஓர் சப்தத்தைக்

கேட்டு, யானைதான் நீர் அருந்துகிறதென நினைத்து, சப்தம் உண்டாகும் இடத்தைச் சென்று தாக்கவல்ல 'சப்தவேதி' என்ற அஸ்திரத்தை எய்தார். அவ்வஸ்திரம் சென்று தாக்கியபோது 'அம்மா' என்ற மானிட ஓலம் கேட்டது. அவ்வோலத்தைக் கேட்ட தசரதர் அதிர்ச்சியுற்று ஓடிப்போய் பார்த்தபோதுதான் பத்துவயது பாலகன் ஒருவன் மார்பில் கணை பாய்ந்து துடிப்பதைக் கண்டார். இரத்த வெள்ளத்தில் கிடந்த அப்பாலகனைக்கண்டு மனம் வருந்தியதசரதர் 'தம்பி! யானை நீர் அருந்துவதாக நினைத்துத் தவறு செய்துவிட்டேன்'' என்று கூறிக்கண்ணீர்விட்டார். அப்பொழுது அந்த பாலகனும் தசரதரிடம் 'ஐயா! என் பெயர் சுரோசனன். என் தந்தையார் சலபோசனர். என் தாய், தந்தையர் இருவரும் தவசிரேஸ்டர்கள். ஆனால் இருவரும் கண்பார்வை இல்லாதவர்கள். மேலும் வயோதிகர்கள். அவர்களுக்கு சேவை செய்வதே என் வாழ்க்கையாக வாழ்ந்து கொண்டிருந்த என்னை வதைத்துவிட்டீர்களே! தாகத்தால் தவிக்கும் என் பெற்றோர்களுக்கு நீர் கொண்டு போக வந்த நான் இப்பொழுது உங்களால் எமனிடம் செல்கிறேன். இந்தச் சுரகுடுவை நீரை மட்டும் அவர்களிடம் வழங்கி, முடிந்தால் என் உடலையும் அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள்' என்று கூறி சுரோசனன் தன் உயிரை விட்டுவிட்டான்.

சுரோசனனின் உயிரற்ற சடலத்தையும் குடுவை நீரையும் சுமந்தவாறு அவனுடைய கண்ணற்ற பெற்றோர்கள் இருக்கும் இடம் சென்ற தசரதர் அவர்களுக்கு முதலில் தண்ணீரைக் கொடுத்தார். அவர்களின் தாகம் தணிந்ததும் தம் அறியாமையால் நிகழ்ந்து விட்ட கொடுமையைக் கூறி கண்ணீர் விட்டார். அவர்களை இனிமேல் தாமே பராமரித்துத் தம் பாவத்திற்குப் பரிகாரம் செய்ய விழைவதாகவும் கூறித் தசரதர் மன்றாடினார். ஆனால்சுரோசனனின் மரணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத சலபோசன முனிவர் 'ஆ மகனே மாண்டனையா' உன்னைப் பிரிந்து நான் வாழ மாட்டேன். நானும் உன்னிடமே வந்து விடுகிறேன்' என்று கூறி புத்திர சோகத்தால் துக்கித்து மாண்டு போனார். சலபோசனரின் துணைவியாரும் உடன் மாண்டுபோய்விட்டார். சலபோசன முனிவர் சாகும் முன் 'தசரதா! எங்களைப்போல் நீயும் உன் மகனைப் பிரிந்து புத்திர சோகத்தால் மடியக் கடவாய்' என்று சாபமிட்டுவிட்டு இறந்து போனார்.

அந்த சலபோசன முனிவரின் சாபத்தை எண்ணித்தான் தசரதரும் இப்பொழுது விசுவாமித்திரர் இராமரைத் தரக்கேட்டதும் நடுங்குகிறார். முனிவர் சாபமிட்ட நாளில் தசரதனுக்கு மைந்தர்கள் இல்லை. ஆகவே கண்களைப்போன்ற மக்கள் இலாத அவரைக் 'கண்ணிலான்' என்று கம்பர் காட்டுகிறார். புத்திர காமேட்டி யாகம் செய்து மைந்தர்களைப் பெற்றார் அவர். அவரே இப்போது முனிவரின் சாபத்திற்கு ஆளாகி இராமரையும் பிரிந்து அதனால் தாம் மாளவும் போவதாக எண்ணிக் கொள்கிறார். இத்தகைய தசரதரின் நிலைக்குப் பொருத்தமாகவே 'கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்' என்று கம்பர் உவமை கூறியிருக்கிறார். மேலும் இதே தொடரால் 'கண்ணிலாத சலபோசனர் சுரோசனனைப் பெற்று அவனைப் பறிகொடுத்த நிலை போன்ற துயரைத் தசரதர் அடைந்தார்' எனவும் கம்பர் குறிப்பில் உணர்த்தியிருப்பது உணரத்தக்கது.

'எண்ணிலா அருந்தவத்தோன்' என்ற தொடரையும் கம்பர் ஆண்டிருக்கும் சிறப்பும்

---

## பேயர் யார் ?

எறும்புகடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்
பெறுங் கதிகண்டும் தேறார் பேய்கள் - அறிந்த
உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப் படும்.

—முதுமொழிமேல் வைப்பு.

---

எண்ணி எண்ணி மகிழ்ந்திட தக்கதொன்றாகும். பசுவின் காரணமாகவே மன்னனாக இருந்த கோசிகன், பின் முனிவரானார். இப்போது அவர் எ ண் ணி ல் அவருடைய தவமகிமையால் காமதேனுபசுவே வந்துவிடும் என்பதுஒருபொருள். அவருடைய தவத்திற்கு எண்ணிக்கையே இல்லை, எண்ணிலா தவத்தான் என்பதுமற்றொருபொருள். அவருடைய தவம் எல்லாம் ஆக்கம் தரும் தவங்களே; எண்ணில் ஆவரும் தவத்தன் என்பது இன்னும் ஒரு பொருள். அவருடைய தவங்கள் அனைத்தும் சாதாரண தவங்கள் அன்று; மிகக் கடுமையான தவங்கள்—எண்ணிலா அருந்தவத்தோன் என்பது மற்றும் ஒரு பொருள். இப்படிப் பல பொருள்களும் விளங்கித் தோன்ற ஒரு தொடரை ஆண்டிருக்கும் கம்பரைக் கவிச்சக்கரவர்த்தி என்று வையம் போற்றுவதில் வியப்பென்ன இருக்க முடியும்?


எமன் பாசக்கயிற்றினை வீசித் தம் கழுத்தில் சுருக்கிட்டு விட்டதைப் போன்றுணர்ந்து துயரத்தில் வாடுகிற தசரதர் எப்படியாவது இராமனைப் பிரியாமல் தாம் தட்டிக் கழித்துவிட முடியாதா என்றும் எண்ணி விசுவாமித்திரரிடம் நயமாகப் பேசுகிறார் ''சுவாமி! இராமன் மிக இளையவன். அவனுக்குப் படைக்கலப் பயிற்சியும் போதாது. நீங்கள் அஞ்சுகிற வகையில் அரக்கர்கள் தவத்திற்கு ஊறுசெய்கிறார்கள் என்றால் அவர்கள் மிக வலியவர்களாகத்தான் இருக்க வேண்டும். கவலைப் படாதீர்கள்! இதோ நானே உங்களுடன் புறப்பட்டு விட்டேன். யாகத்திற்கு இடையூறு இன்றி நான் காத்துத்தருகிறேன். வாருங்கள் போவோம்'' என்று தசரதர் கூறி இராமனை விசுவாமித்திரருடன் அனுப்பத் தமக்கு விருப்பம் இல்லை என்பதைக் குறிப்பில் உணர்த்தி விடுகிறார். அவ்வளவுதான், விசுவாமித்திரருக்கு வருகிறது பாருங்கள் கோபம்.

''கேளுங்கள், எது வேண்டுமானாலும் அருள்கிறேன்'' என்று கூறி இப்போது ஏமாற்றுகிறாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்' என்பதைப் போல் புருவங்களை நெறித்து 'ஆஹா' என்று கோபத்தால் விசுவாமித்திரர் நகைக்கப் பெருநெருப்பு எழுகிறது. விசுவாமித்திரரின் கோபாக்கினியின் புகையினால்சூரியனே மறைந்துவிடுகிறது. பூகம்பம் உண்டானால் எப்படி அசையாத மலைகளும் மரங்களும் நிலைகுலைந்து பறக்குமோ அப்படி அண்டசராசரங்களுமே ஆடுகிறது. ஊழிக் காலம் வந்து விட்டதோ என்று தேவர்களும் அஞ்சி நடுங்குகிறார்கள் என்று விசுவாமித்திரரின் சீற்றத்தை வர்ணிக்கிறார் கம்பர்.


''என்றனன் என்றலும் முனிவோடு எழுந்தனன்மண்
படைத்த முனி இறுதிக் காலம்
அன்றெனவா மென இமையோர் அயிர்த்தனர்மேல்
வெயில் கரந்த தங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றனவந்தது நகையும் சிவந்தன கண்
இருண்டன போய்த் திசைகள் எல்லாம்''.

—[தொடரும்]

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் ஆலய மதிற்சுவர் கால்கோள் விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்துகொண்டு கல்வெட்டினைத் திறந்து வைத்தார்கள். இவ்விழாவில் மறுவாழ்வுத்துறை இயக்குநர் திரு சிவகுமார் ஐ.ஏ.எஸ்., இணை ஆணையாளர் திரு ந.ச. இராமச்சந்திரன், பி.ஏ.பி.எல்., கயப்பாக்கம் அறச்சுடர் திரு கே. முத்துலிங்கனார், திருமதி சௌந்தராகைலாசம் அம்மையார், டாக்டர் திரு ஔவை நடராஜன், பேராசிரியர் இராம. சுப்பிரமணியம், திரு எம்.வி. அரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில் 15.8.88 அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாவின் போது மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்து கொண்டு ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை வழங்கினார். அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜி. புஜங்கராவ், ஐ.ஏ,எஸ்., உதவி ஆணையர் திரு பக்கிரிசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

